தென்மொழி

மும்மொழித் திட்டம் மூளையைக் குழப்பும் !

" இராதெம் நிலத்தில் இந்திப் படிப்பு " – என
மொரார்சி தேசாய் செவிப்பறை அறுபட
முதல மைச்சர் முழங்கிட வேண்டும்;
உதவாப் பேச்சும் உளறலும் வேண்டா!

பள்ளிப் பிள்ளைகள் இந்தி படிப்பதைக்
கள்ளிப் பாலைக் குடிப்பதாய்க் கருதுக!

பேராயக் கட்சிப் பெருந்தலை வர்கள்
ஊரா யத்தில் உலாவர விரும்பின்
வடவர்க்கும் இந்திக்கும் வால்பிடித் துயிர்ப்பதை
விடவும்; அல்லது தம்முயிர் விடவும்;

மனநலம், பண்பாடு வேண்டின் தமிழர்
இனநலம் பேணுக! இந்தியைத் தவிர்க்க!

மும்மொழித் திட்டம் மூளையைக் குழப்பும்!
தம்மனம் விரும்பின் தனித்தனி பயில்க!

தமிழர் தமிழையும் ஆங்கில மொழியையு
அமிழ்தெனக் கற்க; ஆக்கம் பெறுகவே!

சுவடி ரு. ஓலை அ.
கன்னி (புரட்டாசி) ககூகஅ.

தனித்தமிழ்
இலக்கியத்
திங்களிதழ்



-நமக்கு வந்த மடல்கள்

O அன்பும், ஆற்றலும், பண்புள்ளமும் கொண்ட ஆசிரியர்க்கு வணக்கம். தென்மொழி அன்பர்கள் பலரில் யானும் ஒருவன். தங்களிடம் நான் ஒரு செய்தியை வெளிப்படுத்த விரும்புகின்றேன். தங்களுக்கு எதிராகப் பார்ப்பனரும், பார்ப்பன இதழ்களும் மட்டுமின்றி, கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சிலரும் தெரிந்தோ தெரியாமலோ சூழ்ச்சி செய்கின்றனர். இன்னொரு செய்தியையும் தெரிவிக்கின்றேன். எங்கள் கல்லூரி67-68-ஆம் ஆண்டுக்கான குறிப்பேட்டில்(Calendar) பட்ட வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணப் பகுதி வெளியிட்டுள்ளனர். அவை யாவும் நேரடியாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, அதன் சிறப்பு கெடுக்கப்பட்டுள்ளது. விரைவில் அக் குறிப்பேட்டை அனுப்பி வைக்கின்றேன்.

சி. செந்தமிழரசு, முதலாண்டு அறிவியல். ஆ.பீ சீ.அ. கல்லூரி, திருப்பத்தூர் (முகவை மா. வ.)

O அன்புள்ள தென்மொழி! நான் தென்மொழியின் தில்லை முகவராகப் பணியாற்ற முன் வருகின்றேன். அதன் வழிமுறைகளைத் தெரிவிக்க. எனக்கு நூறு படிகள் தேவைப்படும். நான் இன்னும் இரண்டாண்டுக்குள் 'தென்மொழி' விற்பனையைப் பத்தாயிரமாக்க என்னாலான முயற்சிகளை எடுத்துக்கொள்வேன். அம் முயற்சி வெற்றிபெற உன் பொறுப்பாசிரியர் திரு. பெருஞ்சித்திரன் அரசியல் பற்றி வாய்திறக்காமல் இருக்க வேண்டும். இஃது ஏனெனில் அவரின் அரசியல் அறிவு சுன்னம் (சூனியம்). நான் இதுவரை திரு. பெருஞ்சித்திரனிடம் இதுபற்றி வெளிப்படையாகப் பேசாமல் இருந்ததற்குக் காரணம் அவர் ஒரு காட்டுமிராண்டியாக நடந்து கொள்கிறார் என்பதால்தான். -வாழ்க பெரியார்! ஆள்க அண்ணா! வெல்க தென்மொழி!

–செ. நடேசன், 23. வாண்டையார் அரண்மனை, சிதம்பரம்.

O தமிழ்த்திரு ஐயா! மறைமலையடிகளையும் பாவேந்தரையும் முன்னோடிகளாகக் கொண்டு நடத்தப்பெறும் தென்மொழியின் கொள்கையும் கோட்பாடும் தமிழனின் மான உணர்விற்கு அரணாய் இலங்குதல் உண்மையே! 'தென்மொழி' என்போன்ற தமிழர்க்குச் செங்கரும்பே! ஆசிரியரின் 'நூருசிரியம்' கழகக்காலத் தமிழ்ச்சுவையைத் தெளிக்கின்றது. பொருட்செறிவும் சொற்செறிவும் பொதுளிய அதன் அழகே தனிப்பாங்குதான். உள்ளொளியைக் கிளப்பிவிட்டு, உணர்ச்சித் திருவிருந்து படைக்கின்றது. என்போன்ற இளம் உள்ளங்களைப் பண்படுத்தும் தங்களின் தமிழ்த்தொண்டு வணக்கத்திற்கு உரியதாம். அரசியல் நிலைகளை நடுநிலைக்கண்ணோட்டத்துடன் எழுதித் தமிழரைத் தெளிவுபடுத்துகின்ற செயல் பாராட்டத் தக்கது.

–வள்ளிமுருகு, தூயசவரியார் கல்லூரி விடுதி, பாளையங்கோட்டை.

தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்.

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே.

சுவடி -5 :: ஓலை - 8

கன்னி (புரட்டாசி) தி. பி. ௧௯௯௮ (1967-செப்டம்பர்)

பொறுப்பாசிரியர்:- பெருஞ்சித்திரன்

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1

மக்களின் எல்லாவகை எழுச்சிகட்கும், அரசினரின் இந்திக் கொள்கையே காரணம்!

"தொட்டிலையும் ஆட்டிவிட்டுப் பிள்ளையையும் கிள்ளிவிடுதல்" -என்ற பழமொழியைப் படிக்கும் அல்லது கேட்கும்பொழுதெல்லாம், "இஃது என்ன மடத்தனமான பழமொழியாய் இருக்கிறதே; எவனுவது இப்படிச் செய்வானு? தொட்டிலை ஆட்டிவிடும் ஒருவன் அதில் தூங்கும் பிள்ளையைப்போய் ஏன் கிள்ளவேண்டும்? பிள்ளை

மேல் வெறுப்பென்றால், தொட்டிலைப்போய் இவன் ஏன் ஆட்ட வேண்டும்? இப்படிப்பட்ட செயலை எவனாவது வைத்தியக்காரனே செய்தல் வேண்டும்; அல்லது வெறியனே செய்தல் வேண்டும்'' —என்று இது வரை நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இந்தி மொழியைப் பொறுத்தமட்டில் நம் நடுவணரசினர் செய்து வரும் செயல்கள், கடைப்பிடித்துவரும் கொள்கைகள் இவற்றைப் பார்க்கும்பொழுது. ''இந்தப் பழமொழி எத்துணையளவு உண்மை வாய்ந்தது!'' என்று எண்ணி வியக்கின்றேன்.

அண்மையில் இந்தியத் தலைமையமைச்சர் திருவாட்டி இந்திரா காந்தி அவர்கள் தென்னாடு வந்திருந்தபொழுது, ''மக்கள் மொழி, மாநில உணர்ச்சிகளை மிகுதியாகக் கொண்டிருக்கின்றார்கள்'' என்றும், ''அவ்வாறு அவர்கள் கொண்டிருக்கும் இவ்வுணர்ச்சி இந்திய ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் மிகவும் கேடு பயக்குமேயன்றி, ஒருகாலும் நன்மை பயக்கா''தென்றும அறிவுரை கூறியிருக்கின்றார். கொள்கைகளைக் கூறுவதற்குக் கலவரங்களையே கருவியாகக் கொண்டிருக்கும் வடநாட்டு இந்தி வெறியர்களிடமும், மராட்டிய சிவசேனைப் பித்தர்களிடமும் போய்க் கூறவேண்டிய அறிவுரை, எந்த வகையான கொள்கையையும் சரிவர எடுத்துக்கூறவே அஞ்சிக் கொண்டிருக்கும் இத் தென்னாட்டு—குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களிடை வந்து கூறப்படுகின்றதே என்பதை நினைக்கையில் நமக்கு ஒருபுறம் நகைப்பும் மறுபுறம் துயரமுமே ஏற்படுகின்றன. அம்மையார் தந்தையைப்போல் ஒரு பெரிய அரசியல் தந்திரியாக- சூழ்ச்சிக்காரராக இல்லாவிட்டாலும், இத்தென்னாட்டு மக்களை முற்றிலும ஏமாளிகளாக நினைதது விட்டாரே என்று கருதி அவர்க்காக மிகவும் இரங்குகின்றோம்.

இந்தியைப் பற்றிப் பேசப்படாத நாளில் -ஆங்கிலேயனை எதிர்த்துப் போராடிய நாளில் இல்லாத எந்த ஒற்றுமையை—அல்லது ஒருமைப்பாட்டை அம்மையார் இப்பொழுது எதிர்பார்க்கின்றார் என்று நமக்கு விளங்கவில்லை. தென்னாட்டினர் ஒருவரும் இவர்கள் செய்த தன்னுரிமைப் போரில் தலைகொடுக்கவில்லை என்று இந்தியத் தன்னுரிமை வரலாற்றையே மாற்றியெழுத அம்மையார் துணிந்து விட்டாரோ? காந்தியாரும், திலகரும், நேரும்,படேலும் போராடியதாலேயே வெள்ளைக்காரன் அஞ்சிக்கொண்டு, இவ்விந்திய நாட்டை இவ் வடநாட்டினர் கைகளில் தூக்கிப்போட்டு விட்டுப் போய்விட்டான் என்பது

தான் இவர் அழித்தெழுதிய வரலாறு? இங்குள்ள சிதம்பரங்களும், குமரன்களும் மட்கி மண்ணோடு மண்ணாகப் போய்விட்டனர் என்பதே அவர் படிக்கும் புதிய வரலாற்று வரியா? எதற்காக ஒற்றுமை, ஒருமைப்பாடு என்பதில் நம் பெண் தலைமையமைச்சருக்கு இவ்வளவு அக்கறை? இந்த நாட்டில் வடநாட்டினர் தவிர நாட்டுப்பற்றும், மக்கள் நலனும் கருதுவதற்கு வேறு எவருமே இலர் என்பதுதான் அதற்குப் பொருளா?

அம்மையாரை, இந்த நாட்டின் தலைமையமைச்சரை நாம் நேரடியாகக் கேட்கின்றோம்: "இந்த இந்திய ஒருமைப்பாடு, ஒ ற் று மை என்ற பேச்சுகள் இதுவரை இல்லாதபடி இன்று இவ்வளவு வலியுறுத்தப்படுவதற்கு அடிப்படைக்காரணம் என்ன என்பதை நீங்கள் ஒரு கண்ணிமைப் பொழுது எண்ணிப் பாருங்கள். இந்தி, இந்த நாட்டின் இணைப்பு மொழி என்று என்றிலிருந்து வலியுறுத்தப் பெற்றதோ, அன்றிலிருந்து வந்தன ஒருமைப் பாட்டுக்குக் கேடும்; ஒ ற் று மை நோக்காடும்! மக்களின் மனத் தொட்டிலை ஒருபுறம் ஒற்றுமை, ஒருமைப்பாடு என்று தாலாட்டுப் பாடி ஒருகையால் ஆட்டி வைக்கின்றீர்கள்; மறுபுறம் இந்தி எப்படியும் இணைப்பு மொழியாகத்தான் இருந்து வரும் என்று மக்களைக் கிள்ளி விட்டு வேடிக்கை பார்க்கின்றீர்கள். கிள்ளுகள் தாங்க முடியாமல் அழுகை அடமாக மா று ம் பலவகைக் கலவரங்களுக்கும் நீங்களே முழுக் காரணமாகியதோடன்றி, இந்திய நாட்டு வரலாற்றில் அமைதிக்கு வழிதேடிய புனிதத்தலைவர்கள் என்ற பாராட்டுக்கும் வேறு ஆளாகிக் கொண்டீர்கள் !"

"உங்கள் தந்தையாகிய நேருவோ, அவரையே பின்பற்றி அரசியல் நடத்தியதாக விளம்பரப் படுத்தப் பெற்றிருக்கும் சாத்திரியாரோ, அவருக்குப்பின் வந்த நீங்களோ உலகிற்குப் பெரிய பெரிய தலைவர்களாக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்ற வழியிலன்றி வேறு எந்த நன்மைக்காவது இந்த ஒற்றுமைப் பாட்டும், ஒருமைத் தாலாட்டும் பயன்பட்டிருக்கின்றனவா? அரசினரின் விளம்பரத்துறையின்றி வேறு ஆட்சித் துறைகள் இந்த இருபது ஆண்டுக் காலத்தில் ஒருமுறையாவது சரிவர இயக்கப்பட்டு வந்துள்ளதாக நீங்கள் மெய்ப்பித்துக்காட்ட முடியுமா? கோடிகோடியாகக் கடன் பெற்று, இலக்க இலக்கமாகச் செலவழித்து, ஆயிர ஆயிரமாகக் கணக்கு எழுதி, நூறு நூறாகப் பயன்பெறும் பேதைத்தனமான பொருளியலும், பதுக்கல் காரர்களையும்

கொள்ளைக்காரர்களையும், கொலைகாரர்களையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு, முதலாளி தொழிலாளிச் சிக்கல்களை அவிழ்க்க நீங்கள் போடுகின்ற சட்ட திட்டங்களை வானொலியிலும், செய்தித் தாள்களிலும், கோடிக்கணக்காக ஆளுயரத்தில் அடிக்கின்ற ஐவண்ணச் சுவரொட்டிகளாலுமே விளம்பரப்படுத்திப் பெருமைதேடும் ஏமாற்றுத்தனமான அரசியலும், சாதிகள் என்றும் சமயங்களென்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பகுப்புகளை உண்டாக்கிக் கொடுத்து அவற்றிற்குக் காவலாகவும் இருந்துவரும் உங்கள் 'வேத, புராண, இதிகாச'க் குப்பைகளைத் தூக்கி அரபிக் கடலிலோ, வங்கக் கடலிலோ, தென்மாக் கடலிலோ வீசியெறிய மனமின்றிப் பார்ப்பனர்களின் பூணூல்களுக்கும், குடுமிகளுக்கும் வழலை(சோப்பு)க் கட்டியைப் போட்டுத் தூய்மை செய்து கொண்டு வரும் கோழைத்தனமான குமுகாயவியலும் – நடத்திக் கொண்டு வரும் உம்மனோரன்ன பத்தாம்பசலிக்காரர்கள் தலைமை நாற்காலிகளில் அமர்ந்து கொண்டிருக்கும்வரை இவ்விந்திய மண்ணில் ஒற்றுமையும் முளைக்கப் போவதில்லை; ஒருமைப்பாடும் விளையப் போவதில்லை என்பதைக் கல்லில் செதுக்கி வைத்துக் கொள்ளுங்கள்.''

''ஒருமைப் பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் ஒன்றுக்கும் உதவாத 'இந்திமொழி' ஒன்றுதான் வழிகாட்டியா? ஒருமைப் பாட்டை உருவாக்க அதில் இலக்கியப் பசையுண்டா? மனவளம் கொழிக்கும் கருத்து மணம் அதில் இருக்கின்றதா? என்ன விளைவு கருதி அந்த மொழியால் மட்டுந்தான் ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும் என்று கருதிக் கொண்டு சாக்கூச்சல் போட்டு வருகின்றீகள்? ஓடிப்போன தர்ம தேசாவையும் அவன் மனைவியையும் பிடித்துச் சிறையிலடைக்க உங்களிடம் வக்கில்லை; அல்லது அரசியல் அதிகாரத்திலேயே அமர்ந்து கொண்டு, அரசினர் கருவூலத்துப் பெருச்சாளிகளாக இருந்துவரும் டாடா, பிர்லா, டால்மியா போன்ற பணம் விழுங்கி முதலைகள் தம் தம் பதுக்கல்சரக்குகளை வெளியில் கொணரத்திட்டமில்லை; ஒரு கா்தொடிந்த ஊசிக்கும் பயன்படாத ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் பேசிப் பேசியே உங்கள் அரசியலை நடத்திவிடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கின்றீர்கள்?

''வருகின்ற வருமானங்கள் எங்கே? அவை செல்கின்ற செலவினங்கள் எங்கே? அவற்றால் மக்களுக்கு என்ன பயன் விளைகின்றன? மக்கள் பசியும் பட்டினியுமின்றி, அச்சமும் கவலையுமின்றி வாழ்ந்து

வருகின்றனரா? என்பது பற்றியெல்லாம் உங்கள் பேச்சுகளில் அடி படுவதாகக் காணோமே! எங்கு வந்தாலும், எந்தக் கூட்டத்தில் பேசினாலும், எத்தனை மணி நேரம் பேசினாலும், எந்தக் கருத்தைத் தொட்டாலும், சுற்றி வளைத்து இந்த ஒருமைப் பாட்டையும், ஒற்றுமையையும் பற்றி, வலியுறுத்தாவிட்டால் உங்களைப் போன்ற பெருந் தலைவர்களுக்குப் பெருத்த இழுக்காகப் போய்விடுமோ? அப்படித்தான், நீங்களும் உங்களுக்கு இடங்கொடுத்த சாத்திரியும்,உங்கள் தந்தை நேருவும் இதுநாள்வரை ஒற்றுமை, ஒருமைப்பாடு என்று போட்டுவந்த கூச்சல்களுக்கு என்ன பயன் விளைந்தது; மராட்டியம் பிரிந்தது; வங்காளம் விரிசலுட்டது; பஞ்சாபு துண்டானது; கோவா தனித்து நின்றது; காசுமீர் இடையில் தொங்குகிறது; ஆந்திராவும் தமிழகமும் தண்ணீருக்குக் கரை கட்டின. கேரளாவும் தமிழகமும் அரிசிக்குச் சுவரெழுப்பின. சாதிகள் ஒழிந்தனவா? சமயங்கள் ஒன்றாயினவா? பூணூலை எவனும் அணிவதில்லையா? குடுமியை எவனும் வைப்பதில்லையா? கோயில் கருவறை வரை எல்லாரும் போய் வருகின்றனரா? பார்ப்பனர் தொட்டால்தான் தெய்வம் உடல் குளிரும் என்ற புளுகுக்கு வேட்டு வைத்தாகி விட்டதா? அவன் ஓதுகிற சமசுக்கிருதத்திற்குத்தான் இறைவன் செவிசாய்ப்பான் என்கின்ற கொப்பரைப் பொய்யைக் கவிழ்த்து விட்டீர்களா? ஏழைகள் வயிறு குளிரக் குளிரக் கூழ் வார்த்தாகி விட்டதா? பணக்காரனின் பொதிசதை கரைந்ததா? அவனுக்கு விற்கப்படும் செரிமானக் குளிகைகள் முற்றும் தீர்ந்து போயிற்றா? இவ்வேதுங் கெட்ட நாட்டில் பிறந்த கரிசுக்காக ஒரு முழக்கந்தையுமின்றிக் காற்றிலும் கனலிலும் வாடிக் கிடக்கின்றவர்களின் மானம் உங்கள் இரண்டு கைகளாலும் பொத்திக் கொள்ளப்பட்டு விட்டதா? "ஏழைகள் மட்டுந்தாமா துணிகள் கட்டவில்லை; நாங்களுந்தாம் கட்ட வில்லை!" என்று கேட்பது போல் கொழுப்புப்பிடித்த செல்வர்கள் அணியப்பெறும் மெல்லிய சல்லாடைகளுக்கான வெளிநாட்டுச் செலாவணி குறைந்ததா? கள்ளத் தோணிகளின் எண்ணிக்கையை எத்தனையிலிருந்து எத்தனைக்குக் குறைத்தீர்கள்? கடத்தல் பேர்வழிகளில் எத்தனைப் பேரைக் கடுஞ்சிறையில் தள்ளி அவர்களின் மார்மேல் உங்கள் காலை வைத்து நசுக்கினீர்கள். கள்ளமது அருந்தி, அம்மண ஆட்டக்காரிகளின் ஆழ அகலம் பார்த்துச் சுவைத்துக் கொண்டிருக்கும் செல்வக் கூத்தாடிகளின் கொல்லைப்புறக் கதவுகளுக்கு என்ன பூட்டுகள் பூட்டி வைத்தீர்கள்? ஏனம்மா? ஊமைத்தனமாக உட்கார்ந்து கொண்டிருக்கின்றீர்கள்? நாற்றமெடுக்கும் சாய்க்கடைக்

குமுகாயக் குப்பை மேடுகளின்மேல், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்த பச்சைப் பட்டுத் துணியைப் போர்த்து அதன்மேல் அரசியல் கூத்து நடத்திக் கொண்டிருக்கும் நீங்கள், ஒற்றுமைப் பாட்டும், ஒருமைப் பாட்டுக் கெக்கலிக் குரலும் எழுப்பி வருகின்றீர்களே அவற்ருல் பெற்ற பயன் என்ன?

''நாளுக்கு நாள் இந்திப் பிணத்திற்கும் சமசுக்கிருத விறகுக் கட்டைக்கும் நீங்கள் மூட்டும் மணப்புகை மயக்கத்தில் மதி மழுக்குற்று, வானொலியிலும், செய்திப் படத்திலும் கும்மாளமிட்டுக் கூத்தாடித் திரிகின்றனரே, ஆரிய நாடோடிகள்-பார்ப்பனப் பழிகாரர்கள் அவர்களைத் தவிர, உங்கள் ஒற்றுமைக் கூச்சல் யாருக்கும் பயன்பட்டதில்லை என்பதை நீங்கள் அறிவீர்களா?''

உங்களுக்கு நல்ல மனம் வரவேண்டும்; மானம் வரவேண்டும்; சூடு உறைக்க வேண்டும்; சுரணை எழும்ப வேண்டும். அப்பொழுது தான் நாங்கள் கூறும் கூற்றின் மெய்ப்பொருள் விளங்கும்; எழுதிக் காட்டும் எழுத்தின் வேகம் புரியும்; கழுதையாய்க் கத்தும் கருத்தின் உட்பொருள் விளக்கமாகும். அதுவரை உங்கள் காட்டுக் கூச்சல் அடங்காது; இந்திவெறி தணியாது; நாத்தடிப்பு அடங்காது; நாத்தூற்றல் ஒடுங்காது; உங்கள் போலி அரசியலும் ஒழியாது.

அம்மையே! இந்நாட்டின் தலைமையிடத்தில் அமர்ந்திருக்கும் பெண்கள் குல மாமணியே! உங்களுக்குத் துணிவும் மானமும் சிறிது அறிவும் இருக்குமானுல், வெளிநாட்டிற்கு ஓடாமல், இந்நாட்டிலேயே பலவண்ண இயங்கிகளில் பகல் முழுதும் உலாவந்து கொண்டிருக்கும் தர்ம தேசாக்களைப் பிடியுங்கள்; பதுக்கல் முதலைகளை ஒழித்துக் கட்டுங்கள்; இந்தி மொழி வெறியர்களின் குரல் வளையை உங்கள் முந்தானைச் சேலையால் இறுக்கிக் கட்டுங்கள்; உங்கள் இருகை அணைப்புக்குள்ளாகவே பதுங்கிக் கிடக்கும் பொன்கடத்தல்காரர்களையும், கள்ளத் தோணியர்களையும் வெளிக்குக் கொணர்ந்து மக்கள் மன்றத்தில் வைத்துச் சுட்டுப் பொசுக்குங்கள். சாதிச் செருக்கர்களை மோதி முறியுங்கள். சமய வேரோடிகளை வெட்டிச் சாயுங்கள். வானுயர்ந்த கோயில் முகடுகளின் இருண்ட கருவறைக்குள் பதுங்கிக் கிடக்கும் குமுகாயப் புல்லுருவிகளை மருந்து வைத்துக் கொளுத்திக் கருக்கிக் காட்டுங்கள். அப்படிச் செய்வீர்களானுல் நீங்கள் வானை அண்ணாந்து பார்த்து,வாயைப்

பிளந்து கொண்டு நிற்கும் ஒற்றுமை, ஒருமைப்பாடு அத்தனையும் உங்கள் காலடிகளில் மண்டியிட்டுக்கிடக்கும். அவ்வாறின்றி, நீங்கள் ஒற்றுமை, ஒருமைப்பாட்டை இவ்வுலகில் எங்கும் போய்க் கடனுக்குக் கூட வாங்கி வந்து விட முடியாது என்பதை, அடிமனத்தில் ஆழப் புதைத்துக் கொள்ளுங்கள். இஃது உண்மை; உண்மை; முக்காலும் உண்மை! ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் முழுக் கொள்கையும் உங்கள் அறியாமையுள்தான் அடக்கமாகிப் போகின்றது. உங்கள் குறிக்கோள்கள் அத்தனையும் உங்கள் புறக்கணிப்பில் தான் புதையுண்டு போகின்றது. உங்கள் முழு முயற்சியும் உங்கள் ஓய்வு நேரத்தில்தான் உங்கள் கைகளிலிருந்து நழுவிப் போகின்றது; இந்தியாவை ஒருமைப்படுத்த நீங்கள் எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும், உங்கள் வடநாட்டின் இந்திவெறியர்களின் அடங்காமையுள் தான் சாவொடுக்கம் பெறுகின்றது. இந்தி இந்நாட்டை வேறு பிரிக்கிறது. மாநிலங்களின் கூட்டுறவைத் தகர்த்தெரிகின்றது; மக்களுக்கு உள்ள கூட்டுணர்வை உடைத்தெரிகின்றது; மொழிச் சிக்கலை மேலும் பல சிணுக்குகளுக்குள்ளாக்குகின்றது. மொத்தத்தில் 'சாதி' செய்த வேலையை 'இந்தி' இக்கால் செய்து வருகிறது.

இவற்றையெல்லாம் ஆழ நினைக்காமல் நீங்கள் வாய்மணக்கப் பேச வேண்டா; கைமணக்கச் செய்து காட்டுங்கள்! கால்கடுக்க நடக்க வேண்டா; கைவலிக்கச் செய்து காட்டுங்கள். உங்கள் உள்ளம் உண்மையிலேயே தூய்மையானதுதான்; அஃது இந்திய ஒருமைப்பாட்டை விரும்புவதுதான் என்றால்,இந்தியை–தேவையற்ற ஓர் இணைப்புமொழி என்ற நிலையில் கொண்டுபோய் வைக்கும் சிறுமைப்பணியை உங்கள் கைகள் செய்ய வேண்டா. எச்சரிக்கையோடு இருங்கள்; இந்தி வெறிக்கு நீங்கள் ஆளாகிக் கொண்டே பிறரை வெறியர்களாக ஆக்க வேண்டா. நிலம் யாருக்கும் சொந்தமில்லை; அதில் உள்ள மக்களும் யாருக்கும் கட்டுப்பட்டவரல்லர். உண்மையான ஒன்றைத் தவிர அவர் தம் உள்ளங்கள் எதனாலும் அமைதியுறா.

–பெருஞ்சித்திரன்

அன்பர்களுக்கு ஓர் அறிக்கை.

○ தென்மொழி அலுவலகமும் அச்சகமும் இடம் மாற்றப்பட்டு வருகின்றன. அம் முயற்சியில்தான் கடந்த இதழ்களும், இந்த இதழும் சுணங்கி வந்தன; இனி வரும் ஓர் இதழும் சுணங்கியே வரும். அதன் பின் வரும் எல்லா இதழ்களும் காலத்தால் வரும். இட மாற்றம் எளிதன்று; அரசினர் ஒப்புதல், நகராட்சி அம்பகம் (Licence); மின்சாரத் துறையினர் இசைவு முதலிய அத்தனைக்கும் காத்துக் கிடத்தல் வேண்டும். எனவேதான் இதுபற்றி அன்பர்கள் நம்மை நோதல் வேண்டா என வேண்டிக் கொள்கின்றேன்.

○ "பாவேந்தர் நன்றிக் கடன் கொடைத்திட்டப் பெயர்ப்பட்டியல்" அடுத்த இதழிலிருந்து தொடர்ச்சியாக வெளியிடப் பெறும். தென்மொழியின் வேண்டுகோளுக்கிணங்க இந்நன்றிக் கடனுற்றிய ஆயிரக் கணக்கான அன்பர்களுக்குத் தென்மொழி தன் தலைதாழ்த்தி நன்றி சாற்றுகின்றது.

○ தென்மொழித் தொடர்பாகச் செய்யப்பெறும் எவ்வகைத் திருத்தங்களையும், மாற்றங்களையும் பற்றி எவரும் எவ்வகைக் கருத்தும், கவலையும் கொள்ளாது, தென்மொழி தொடங்கிய பணிக்குத் துணை நிற்க வேண்டிக் கொள்கின்றேன். தென்மொழியின் எல்லா அமைப்பும், வளர்ச்சியும் வளப்பமும் தமிழ்மொழிக்கும், தமிழர்க்குமே உரிமையாக்கப்பெறும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழர் தமக்கென என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் பாசறையாகத் தென்மொழியைக் கருத வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கின்றேன்.

○ அதிகார முறைப்படி சரியான முகவரி தெரிவிக்கப்பெறும் வரை, அன்பர்கள் தென்மொழி கடலூர்-1 என்னும் முகவரிக்கே தொடர்பு கொள்ளவும்.

–பெருஞ்சித்திரன்.

இலக்கியம்

நாருசிரியம்

துரை - மாணிக்கம்

பாட்டு : கூ.

விழவிற் றப்பிய செங்கட் சேஎய்
கொழுவிய கூறினு மொழுகா தலமர
வொருதாய்த் தேடி யுவந்து புன்றலை
பெருமடி புதைக்கும் பெற்றிதே தோழி!
அண்மைத் தாயினுஞ் சேய்மைத் தாயினும்
பெண்மைக் கொன்றிய நெஞ்சம் நாடித்
தேங்குவ தியல்பின் தேரார்
யாங்குகொல் முனிவது? யாதிவர் வினையே!

பாட்டு: கூ

பொழிப்பு: விழாக் கூட்டத்துள் தன் தாயின் பிடியினின்று தவறிய சிவந்த கண்களையுடைய நடைபயில் குழந்தை, உறவும்

நொதுமலும் ஆகிய பிறர், மருட்சியுற்ற அதன் மனத்தைத் தேற்றும் கொழுமையான உரைகளைக் கூறினாலும், அவர்பால் இருந்து பயில்தலை யறியாமல், மனம் சுழற்சியுறத் தன் ஒருதனித் தாயைத் தேடிக் கண்டு உவந்து, தன் இளந்தலையை அவளின் பெருமை பொருந்திய மடியில் புதைத்து ஆறுதலுறும் தன்மை வாய்ந்தது தோழி! அது போல் அருகிலிருப்பினும், தொலைவிலிருப்பினும் மன, மொழி, மெய் களால் ஒருத்தியின் பெண்மைக்குப் பொருந்திய ஆண்மையுடைய வனின் அருள்நெஞ்சம் ஒன்றையே நாடி, அதன் இணைப்பில் தேங்கி அமைதியுறும் தன்மையைத் தத்தமக்குற்ற இயல்பினால் உணர்ந்து தேர்ந்து கொள்ளாத இவர் எம் உளத்தை உணராது செய்ய முற் படும் வினை எத்தகைய சிறுமை உடையது !

விரிப்பு:

இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

தலைவியின் பெற்றாரும் மற்றாரும் தம் உறவோன் ஒருவனுக்குத் தன்னைக் கொடுக்கும் மணவிழா முயற்சிகளைக் கண்ணுற்றுத் தன் உள்ளம் ஏற்கனவே தனக்குப் பொருந்திய ஒருவனை நாடியதென்றும் அவன் உள்ளத்தன்றி அஃது அமைதியுறும் இடம் வேறில்லை என்றும் கூறி, அவர் செயல்களைப் பேதைமை என்று கடிந்து தலைவி தன் தோழிக்கு உணர்த்துதல் போல் அமைந்தது இப்பாட்டு.

தலைவி தன் தூய்மையான காதல் அன்பிற்கு, ஒரு குழந்தையின் தாய்மை அன்பினை உவமையாகக் கூறுகின்றாள்.

ஆரவாரமான விழாக் கூட்டத்துள், நடைபயில் குழந்தை ஒன்று தன் தாயின் பிடியிலிருந்து தப்பி, அவளை எண்ணி எண்ணி மனம் சுழற்சியுறத் துன்புறுவதைத், தான் தன் காதலனை அடைய முடி யாமல் பெறும் மனத்துயருக்கு உவமையாகக் கூறுகின்றாள்.

விழவில் தப்பிய: விழாக் காலத்துத் தவறிய – ஊர் விழாவின் ஆரவாரத்திற் கிடையில் தவறிய குழவியும், மணவிழா ஆரவாரத்திற் கிடையில் நழுவிய தன் மனமும் ஒரே துயர் கொண்டன என்றாள். தாயின் கைநெகிழ்ச்சி குழவியை ஊர்விழா ஆரவாரத்திடை உய்த்துத் துயருறவைத்தது. அதுபோலவே தன் காதலனின் கால நெகழ்ச்சியும்

தன்னை இம் மணவிழாப் பேச்சின் ஆரவாரத்திடை புகுத்துத் துயருறச் செய்தது.

குழந்தை விழிப்பாயிருந்தால் தன் தாயின் பிடிப்பிலிருந்து தவற நேராது போலவே தான் விழிப்பாயிருந்தால் தன் தலைவனின் பிடி, யினின்று தவற நேர்ந்திராமல் இருந்திருக்கலாம் என்று தலைவி தோழிக்கு உணர்த்தினுள்.

இளமையில் குழந்தை தன் தாயை நாடுவது இயல்பு போலவே பருவத்தில் அது தனக்குற்ற ஆடவனையோ பெண்ணையோ தேடிப் போவதும் இயல்பாம் என்ற குறிப்பும் காட்டினுள் என்றபடி.

செங்கட் சேஎய் : சிவந்த கண்களை உடைய நடைபயில் குழவி. மடிப்பிள்ளை மகவும், இடைப்பிள்ளை குழவியும், நடைப்பிள்ளை சேயுமாம். சேய் – சிவந்தநிறத்தது. – நடந்து தொலைவிற் செல்லும் பான்மையது. – சேயோன்.

தாயைத் தேடிக்காணுது அழுது நிற்கும் கண்களை உடையதாகலின் செங்கட் சேய் எனப்பட்டது.

தலைவியும் தன் தலைவனைக் காணுது வருத்த முற்றுச் சிவத்த கண்ணினளாய் இருத்தலைத் தோழிக்குத் குறிப்பாய் உணர்த்தினள் என்றபடி.

கொழுவிய கூறினும் ஒழுகாது: செழுமையான சொற்கள் - அன்பு நிறைந்த சொற்களால் கூறித் தேற்றினும் தம்பால் பழகாது – தன் துயர் நீக்கி அமைதியுருது.

தன் தாயை யன்றி வேறு எவரைக் காணினும், எவர் எத்தகைய செழுமையான அன்பு பொதிந்த சொற்களைக் கூறினும் அக்குழந்தை அவர்பால் ஆறுதல் கொள்ளாததைப் போலவே, தலைவி தன் தலைவன் பாலன்றி வேறு எவருடைய அன்பும் பரிவும் வாய்ந்த சொற்களாலும், செயல்களாலும் ஆறுதல் பெருள் – அமைதியுருள் என்று உணர்த்தியவாறு.

ஒழுகல் – ஒத்துப் பழகுதல் – ஒரு படித்தாய் நிற்றல். உலகில் ஒரே சீராக அமைந்த ஒரு பொருளை யாண்டுங் காண்டல் அரிது

ஒன்று போலவே வேறொன்றை – ஒரே இனமும், தன்மையும். எடையும் வாய்ந்த இன்னொன்றைப் பார்த்தால் இயலாதாம். நெல், கம்பு முதலிய தவச மணிகளும், குன்றி, பவழம் முதலிய பரு மணிகளும் பெரும்பாலும் ஒன்றியிருப்பினும் ஒரோவொரு கால் வேறுபடுவனவே. எனவே ஒரே சீராகவும் – ஒரு படித்தாகவும் இருப்பன நீர்ப்பொருள் ஒழுகும் ஒழுக்குத் துளிகளே! ஒரே நீர்மப் பொருளின் பல துளிகளும் ஒரே சீருடையன. மேலும் ஒரு தொளையினின்று ஒரேயளவாக நீர் துளிர்த்துக் கசிந்து வெளிவருதலைத் துளிகள் என்றும், அதுவரும் தன்மையை ஒழுக்கு என்றும் கூறினர் தமிழர். அதனின்று பிறந்ததே ஒழுக்கம் என்ற மாந்த நடைமுறைச் சீர்மை குறித்த சொல்லும். ஒழுக்கம் உடையவன் என்ற கூற்றுக்கு ஒரே படித்தான சீர்மை – நடைமுறை வாய்ந்தவன் என்பதே பொருள். பெரும்பாலும் உயர்ந்த தன்மைக்கே சீர்மை உரித்தாகலின் ஒழுக்கம் என்பதே உயர்ந்த நெறியைக் குறித்தது. நீர் ஒழுக்கல் உடைய தன்மையின், ஒழுக்கத்திற்கு நீர்மை என்றும் சொல் உண்டாயிற்று. அதன் பின்னரே நீரின் பிற (தூய்மை, தண்மை, பரந்தமை, கொண்மை முதலிய) நுண்தன்மைகளையும் அச்சொல் அளாவி நின்றது. அலமர – சுழல – அஞ்ச – கலங்க–வருத்த–துன்பமுற. சிவந்த கண்களையுடைய அக்குழந்தை தன் விழிகளை நான்கு புறமும் சுழற்றி மருட்சியுற அழுது தன் தாயைத் தேடுதலை உணர்த்திற்று. செங்கண் அலமரத் தேடி என்றும் கொண்டு கூட்டிப் பொருள்கண்டு மகிழ்க:

ஒருதாய்த் தேடி: ஒரு தனித் தாயைத் தேடி. குழவிக்கு தன் தாயை விட வேறொரு புகலிடம் இல்லையாகலின் ஒரு தாய் எனலாயிற்று.

'குழவி அலைப்பினும் அன்னே என்றோடும், (நான்மணிக்கடிகை 35) என்றும்,

''அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும், மற்றவள்தன் அருள் நினைந்தே அழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே''
(பெருமாள் திருமொழி 5 : 1) என்றும் குழவியின் தாய்மைப் பிடிப்பு காட்டப்பட்டுள்ளது.

குழவிக்குத் தாய்போல், தலைவிக்குத் தலைவன் என்பதைத் தலைவி தோழிக்கு உணர்த்தினள்.

உவந்து : உள்ளம் விருப்ப மகிழ்ந்து. "ஒரு தாய்த் தேடி உவந்து- என ஒரு தனித்தாயைத் தேடலும், அவளைத் தொலைவிற் கண்ட அள விலேயே உவத்தலும் கூறலாயிற்று.

தேடிக் கண்டு உவந்து என வராது, தேடி உவந்து என வந்தது உவத்தல் கண்ட நொடியினுனே நிகழ்ந்த விரைவுபற்றி.

அதுபோலவே உவந்து புன்றலை பெருமடி புதைக்கும் என்பதி லும் உவந்து ஓடி என வராது உவந்து புன்றலை புதைக்கும் என்றது, கண்ட அளவிலேயே உவந்து, உவந்த அளவிலேயே ஓடிப் புன்றலை புதைத்தது எனும் விரைவுபற்றி. கண்டவுடன் மகிழ்ச்சியும் மகிழ்ந்த வுடன் ஓடி மடியில் தலை புதைத்ததும் நேர்ந்ததென்க.

புன்றலை – இளந்தலை – சிறியதலை.

பெருமடி புதைக்கும் பெற்றிதே : தாயின் பெருமை பொருந் திய மடியுள் தன் தலையைப் புதைத்துக்கொண்டு ஆறுதலுறும் தன் மையது.

ஒரு குழவிக்குத் தன் தாயின் மடியே பெருமை பொருந்திய மடி போல், பருவமுற்ற தலைவிக்குத் தன் தலைவனின் மடியே பெருமை பொருந்திய மடியாம் என்றவாறு.

தோழி – விளி – தோழி, நீ கேட்பாயாக.

தோழி இன்னும் தன்னைப்போல் ஒரு தலைவனைப் பெற்றி லள் ஆகையினால், அவளுக்குத் தான் தன் தலைவன்பாற் கொண்ட ஈடு பாட்டினை உணர்த்துவாள், முதலில் குழந்தை தன் தாயின்பால் கொண்ட ஈடுபாட்டினைக் கூறினுள் என்க. அண்மைத் தாயினும் சேய் மைத் தாயினும் : இடமும், காலமும் உணர்த்தக் கூறினுள். இடத் தான், அருகில் உள்ளான் எனினும் தொலைவில் உள்ளான் எனினும்- என்றும், காலத்தான், இனி அடுத்து வரும் காலத்தே மணப்பான் எனி னும், அன்றிப் பின்னொரு காலத்தே மணப்பான் எனினும் – என் றும் கொள்க. இடத்தான் சேய்மையோன் எனின், தான் அவனை நாடிப் போதலே முறையென்றும், காலத்தால் சேய்மையோன் எனின், தான் அவன் மணக்கும் வரை காத்திருத்தலே முறையென்றும் அறங் கூறி னுள் என்றபடி. அறம் – ஒழுகலாறு.

பெண்மைக் கொன்றிய நெஞ்சம் நாடி : தன் பெண்மை உளத்திற்குப் பொருந்திய நெஞ்சத்தை நாடி. இக்கூற்றுன் தான் முன்பே தன் தலைவனைக் கண்டு அவன் நெஞ்சுறக் கலந்த நிமித்தங் கூறினாள் என்க.

தேங்குவது இயல்பின் தேரார்: பெண்மை நெஞ்சம் தனக்கொன்றிய ஆண்மை உள்ளத்தைத் தேடித் தேங்கி அமைதியுறுவதே இயற்கையாதலின், அதனை அறியாதவர் என்றும், தமக்குற்ற இயல்பினால் பட்டறிவினால் தன் மகளின் உள்ளத்தைத் தேர்ந்து கொள்ளாதவர் என்றும் பொருள் கொள்க. தமக்குற்ற அறிவாலும், நிகழ்ச்சியாலும் மன அறிவாலும் தன் உள்ளத்தைத் தேராதவர் தனக்கு மணவினை தேர்ந்தனரே என்று இழிவு தோன்றக் கூறினள் என்றபடி.

யாங்குகொல் முயல்வது : தன் உள்ளத்தைத் தமக்குற்ற மனவியலால் தேர்ந்து உணராதவர், இம்மண வினைக்கு ஒருப்படாத என்னை முனிந்து கொள்வது எதற்கு? என்றவாறு.

இக்கூற்றால் தன் தோழிக்குச் சொல்வதுபோல் அருகில் தான் உரைப்பது கேட்டு நிற்கும் தலைவனுக்கும் தன் உறுதிப்பாடு கூறினாள் என்றபடி.

யாதிவர் வினை : மணவினை குறித்த எம் பெற்றோரின் செய்கை இத்தகைய சிறுமை வாய்ந்ததே என்றும்,

மணவிழா குறித்துத் தம் பெற்றோர் வினைபடத் தொடங்கி விட்டனர் ; இனி என் தலைவன் செய்யப் போவதொரு செயல்தான் என்ன? என்று தோழி முகமாகத் தலைவி தலைவனைக் கேட்டனள் என்றும் பொருள் கொள்க.

இப்பாட்டு, 'குறிஞ்சி' யென் திணையும், 'நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது' என்ற துறையுமாம்.

இனி, 'நொதுமலர் வரைவுழித் தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குத் தலைவி அறத்தொடு நின்றது' என்றும் கொளற்பாலதாம்.

(வளரும்)

புறக்கணிக்கப் படும் பேரறிஞர்



தொழிற் பேரறிஞர் கோ. துரைசாமி,
G. D. NAIDU.

(தென்மொழி வெளியிடும் கருத்துரை)

புறக்கணிக்கப்படும் பேரறிஞர்

இங்கு நீங்கள் படிக்கப் போகும் செய்திகள் பேரறிஞர் ஒருவரின் வாழ்க்கை வரலாறு அன்று. தாழ்ந்து கிடக்கும் இந்நாட்டை மேலுயர்த்தவும், அடிமைச்சேற்றிலும் அறியாமைப் படுகுழியிலும் வீழ்ந்து, 'உண்மையான வாழ்வுக்குப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்காக, அவர்களின் உய்வுக்காக நேர்மையாகவும், கூர்மையாகவும், துணிவுடனும் விடா முயற்சியுடனும் அறிவுப் போராட்டம் நிகழ்த்திவரும் ஒரு தனி மாந்தரின் துயரச்செய்திகளே ஆகும்.

வாழ்க்கை வரலாற்றையே மிகுந்த சுவையுடன் படித்துப் பழகிப் போன நம் பத்தாம் பசலி மூளைகளுக்குப், புத்துணர்ச்சியும் வீறும் கொண்டு அறிவியல் புரட்சி நடத்திவரும் கோவைத் தொழிற் பேரறிஞர் திரு. கோ. துரைசாமி (நாயுடு) அவர்களைப் பற்றிய நினைவே சிறிது கசப்பாகத்தானிருக்கும்.

நம்நாடு குடியுரிமை வாய்ந்த ஒரு நாடு என்று வெட்கமின்றிக்கூறிக் கொள்ளப்பட்டாலும், இஃது இன்னமும் ஓர் அடிமை நாடே என்பதை திரு. கோ. து. நாயுடு அவர்களின் வரலாற்றுப் பின்னணிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். சமயத் தலைவர்களின் பழங்கதைக் குப்பை மேடுகளிலும்,அரசியல் ஆரவாரக்காரர்களின் கற்பனைப் புரட்டுகளின் குவியல்களிலும், மூட்டை மூட்டையாகப் பணத்தைக் கட்டிப்போட்டு, அவற்றின் மேல் படுத்துப் புரளும் செல்வச் செருக்குடையவர்களின் தருக்குச் செயல்களின் மூட்டங்களிலும், நின்று கொண்டு, வாழ்வின் உண்மை ஒளிக்கு ஏங்கிக் கிடக்கும் இந்நாட்டின் இளம் நெஞ்சங்களின் எதிர்காலம் பற்றி எண்ணி எண்ணிக் கவலைப்பட்டுக் கிடக்கின்ற ஒரு பேருள்ளம் – புரட்சியுள்ளம் – அறிவாராய்ச்சி நிரம்பிய உணர்வுள்ளம் – இந்நாட்டின் அரசினராலும் அறியாமை மிக்க மக்களாலும் எப்படிப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்பதைப் பற்றியே இங்கு ஓரிரு பக்கங்களில் படிக்கப் போகின்றீர்கள். திரு. கோ. து. நாயுடு அவர்களின் நினைவுகள், துயரச் சூழல்கள், அவர் அடைந்த இன்னல்கள், அவருக்குக் கிடைத்த தோல்விகள் – எல்லாம் நம் மக்களின் அறியாமைகளையும், அதிகாரிகளின் ஆணவங்களையும், அரசினரின் கோணல் மாணலான மூளை அமைப்புகளையும், புத்துணர்வுக்கு வழிதராத நம் புரையோடிய உள்ளங்களையும் என்றென்றைக்கும்

– மக்கட் அமைப்பு உள்ளவரை நின்று பறைசாற்றிக் கொண்டிருக்கும் ; நாம் வெட்கிக் கூனிக் குறுகிப் போகும்படி நாம் வாழ்ந்த காலத்தைக் காறித் துப்பிக்கொண்டிருக்கும். முழுமையாகச் சொன்ஞல் நாம் இப்பொழுது-இந்த நேரத்தில் – ஓர் அடிமை நாட்டில், அறிஞர்களைப் போற்ருத ஓர் அவல நிலப்பரப்பில் – உண்மைக்கும், உழைப்புக்கும் மதிப்பளியாத ஒரு விலங்குக் கூட்டத்திடை – பரந்த புல்வெளிகளில் இராமாயண, பாரதப் பழங்கதைகளைக் கூறி மக்களைக் கிச்சுகிச்சு மூட்டிக்கொண்டிருக்கும் காட்டுமிராண்டிக் கூட்டங்களிடை – கள்ளமும் கரவும் நெஞ்சில் நிறைந்து, பொய்யும் புனை சுருட்டும் வாய்களில் கொப்பளிக்கும் அரசியல் பித்தலாட்டக் காரர்களின் மேடைப் பேச்சுகளில் தமக்கிருக்கும் சிறிதளவு அறிவையும் பறிகொடுத்துவிட்டு, அவல நிலையுடன் வீடு திரும்பும் ஏமாளிக் கூட்டத்திடை வாழ்ந்து கொண்டிருக்கின்ருேம் என்று முதலில் நினைவு வைத்துக் கொள்ளுங்கள்.

இல்லையென்ருல் ஓர் உண்மையான உழைப்பாளியை, தொழில் வல்லுநரை, அறிவியல் நாட்டங் கொண்டு, கள்ளிக்காடாகிய இந் நாட்டை முல்லை காடாக மணக்கச் செய்ய விரும்பும் பேரறிஞர் ஒருவரை, தம் உழைப்பெல்லாம் வாழ்வெல்லாம் எதிர்காலம் பற்றியே எண்ணி எண்ணி இராப்பகல் கண்விழித்துக் கழிக்கும் ஓர் அருளாளரை நாம் மதிக்காமல் இருந்திருப்போமா ? அவர்க்கு ஆக்கமும் ஊக்கமும் தராமல் புறக்கணிப்போமா ?

இங்கிலாந்து, செருமனி, அமெரிக்கா, சப்பான், உருசியா போன்ற வெளிநாடுகளில் – அறிஞர்களைத் தம் கண்களெனப் போற்றும் மக்களிடையே அவர் பிறந்திருப்பாராஞல், அவர் இதுநேரம் ஓர் எடிசனுகவோ ஓர் உலூதர் பர்பாங்காவோ – ஒரு நியூட்டனுகவோ – ஒரு கலிலியோவாகவோ – ஒரு பெஞ்சமின் பிராங்கிளினுகவோ, ஒரு மைக்கேல் பாரடேவாகவோ வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருப்பார். இல்லாமற்போஞல் ஓர் என்றி போர்டாகவோ, இராக்பெல்லராகவோ, ஆல்பிரைட் நோபெல்லாகவோ செல்வத்தில் உயர்ந்திருப்பார். ஒன்றுமில்லாத-இந்த ஏதுங்கெட்ட இந்தியாவில் – அதுவும் தமிழகத்தில் வந்து பிறந்ததஞல் அவர் இன்று வரை வெறும் துரைசாமியாகவே இருக்கின்ருர்.

இங்கு அவர் பிறந்திருந்தாலும் ஒரு பார்ப்பனராகப் பிறந் திருந்தால் அவருக்குப் பார்ப்பனர்களால் திரு. சர். சி. வி. இராமனுக் குக் கிடைத்த, அல்லது கணித அறிஞர் திரு. இராமனுசத்திற்குக் கிடைத்த – அல்லது பொறியியல் அறிஞர் திரு. விசுவேசுர அய்யா விற்குக் கிடைத்த அல்லது பாவலன் பாரதிக்குக் கிடைத்த விளம்பர மாவது கிடைத்திருக்கும். அவர் அறிவையும் அரசும், மக்களும் பயன்படுத்திக்கொண்டிருப்பர். அவ்வாறின்றி அவர் இங்கு வந்து பிறந்தது அவருக்கும், அவரைப் பிறப்பித்த இயற்கைக்குமே இழுக்கு.

இத் தொழிலியற் பேரறிஞர் வாழும் நாடும் மக்கள் கூட்டமும் இவ்வளவு இரங்கத்தக்கதாக இருப்பதால்தான், இவர் தமக்கென்று ஒரு நாட்டையும், ஓர் அரசியலையும், ஒரு மக்களமைப்பையும், சட்ட திட்டங்களையும், ஆணை அதிகாரங்களையும் வரையறுத்துக் கொண்டு தம்மைப் பொறுத்த வரை ஒரு புது நாட்டில், ஒரு புது அரசாட்சியில் வாழ்ந்து வருகின்றார். இவர் நிலத்தில் காலடி வைக்கின்ற எவரும் இவரமைத்த சட்டதிட்டங்களுக்கும், அரசியல் அமைப்புகளுக்கும் உட் பட்டே ஆகல் வேண்டும். அவ்வரசாட்சிக்கு உட்பட்ட மக்களுக்குத் தான் எத்துணை ஒழுங்கு ! மனமகிழ்ச்சி ! வாழ்வுரிமை ! பொதுமை எண்ணம் ! நிறை வாழ்வு ! அடடா ! அவருடன் இயங்கும் அத்தனைப் பேர்களும் தேனீக் கூட்டங்கள் ! சோம்பல் அங்கில்லை; தந்நலம் இல்லை; மனச்சலிப்பு அங்கில்லை ; ஏமாற்று எத்து புரட்டல்கள் அங்கு மருந்துக்கும் இல்லை. ஆம். அவரின் கீழ் இயங்கும் தொழிற் சாலைகளில் நடைபெறும் வாழ்க்கையைத்தான் இங்குக் குறிப்பிடு கின்றேன்.

பேருந்து செய்தொழில் நிறுவனம், சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கூடம், வானொலிப் பெட்டிகள் தொழிற்சாலை, உந்தங்கள் (Electric Motor) செய்தொழிலகம், புகைப்படத்தொழில் திரைப்படத்தொழில் கருவிச்சாலைகள், மின்கம்பிச் செய்யகம், மிதியுந்தத் (Cycle Motor) தொழிற்சாலை, கடிகையாரத் தொழிற்கூடம், ஞெகிழி (Plastic) செய் யகம், ஒலி பரப்புக் கருவி செய் தொழிலகம் நெய்வண்ணங்கள் (Paints) செய்யகம், உந்துவண்டி மூடு அமைப்பகம், கணக்கீடு பொறிகள் செய்யகம், மாவுணுப் (Malt) பொருள்கள் செய்யகம், வேளாண் துறை ஆய்வகம், வேளாண்கருவி செய்யகம், தாள், அட்டை, மரஅட்டைகள் செய்யகம் முதலிய நூற்றுக்கணக்

கான தொழிற்சாலைகள் இவரின் கீழ் இயங்கி, இவர் அறிவியல் எண்ணங்களைச் செயற்படுத்துகின்றன.

திரைப்படக்கருவிகள், வானொலிப் பெட்டிகள், கடிகையாரங்கள் காந்த விளக்கு, எழுத்துப் பொறிப்பான், குழாய் வெட்டிகள், குழாய் வளைப்பான், காற்றுத் தூம்புகள், நுண்ணோக்காடி, தொலைநோக்காடி பதநிலை மானிகள், வேகமானிகள், தொலைவு மானிகள், எடைமானிகள், மின்கலங்கள் முதலிய 80க்கும் மேற்பட்ட நுண்பொருள்கள் இங்குச் செய்யப் பெற்று இவர் பேரறிவுக்குச் சான்று பகர்கின்றன,

75 ஆண்டு, இளையவராகிய இப்பேரறிஞர் இன்னும் இராப் பகல் உழைக்கின்றார். கடந்த 55 ஆண்டுகளாக – 1912-இலிருந்து இவர் உள்ளமும் உடலும் மூளையும் மிகவும் சுறுசுறுப்பாக இவரால் நுண்மையாக – கூர்மையாக இயக்கப் பட்டு வந்திருக்கின்றன. அறிவியல் நாட்டம், தொழிலியல் வேகம், மின்னியல் ஓட்டம், காந்தக் கவர்ச்சி மட்டும் இவர் உள்ளத்திலும் உணர்விலும் இல்லை. இலக்கியக்கனிவு, தமிழ் அருள், விருந்துஅறம், நட்புப் பேரன்பு முதலிய அத்தனையும் பழுத்து, முதிர்ந்து நறவு பிலிற்றும் இவர் சொல்லும், செயலும் இவரை ஒரு பொறியியல் மாந்தன் மட்டுமே என்பதை மறுக்கின்றன. நம் நாட்டவரும் வெளி நாட்டவரும் அண்ணாந்து பார்க்கும் இவர் அறிவின் வளர்ச்சி இந்தியாவின் பனிமலையை விட உயர்ந்து நிற்கின்றது. இவரின் நாட்டுப்பற்று காந்தியடிகளின் நாட்டுப்பற்றோடு ஈடு கொடுத்து நிற்கிறது.

1962 இல் மூட்ட மிட்ட சீனப்போரில் நம் நாடு போர்க்கருவி களின் பற்றுக்குறைவால் வலி விழந்திருப்பதை இப்பேரறிஞர் கண்டு மனத்துயருற்றார். பழைய உரோமாபுரிப் போரில், கிரேக்கர்களுக்கு ஆர்க்கி மிடீசு என்ற அறிவியலறிஞர் போர்க் கருவிகள்செய்து உதவி யதைப் போல் நம் நாட்டுப்போர் மறவர்களுக்குத் தேவையான போர்க் கருவிகள் அத்தனையும் செய்து கொண்டார். தம் எண்ணத்தை இந்திய அரசினருக்கு எடுத்துரைத்தார். இந்திய அரசு அவவெண் ணத்தை மதிக்கவும் இல்லை ; மதித்துத் தன் மதிப்பைக்காப்பாற்றிக் கொள்ளவும் இல்லை. மனமுடைந்த இப்பேரறிஞர் மனச்சோர்வுடன் அம்முயற்சியைக் கைவிட்டார்.

அரசினர் கற்றுத்தரும் 5 ஆண்டுகாலப் பொறியியல் பயிற்சி, இவர் தொழிலகத்தில் ஆறு கிழமைகளில் – 45 நாட்களில் கற்பிக்கப்பட்டு

கின்றது. இத்துணைக்கும் இப்பயிற்சிக்காக இவர் எடுத்துக் கொள்ளும ஆட்களோ பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சி பெருத - ஆனுல் திறமை யுள்ள இளைஞர்களே.

" கருப்பலகைக் கருகில், மேடையில் நின்று கொண்டு – செய் முறையில்லாமல் எழுதியும் பேசியும் நிகழ்த்தப படுகின்ற சொற் பொழிவுகளால் என்ன பயன் விளையப் போகின்றது. ?" என்று இவர் கேட்கின்றார்.

"Can you imagine that by sittiug at the table or standing near the black board or by simply writting and hearing lectures without any practical work, it would serve any useful purpose? No, certainly not. If he is trained in practical work and if he then learns the theory, he would understand them quickly and easily. Even without lectures by his mere thinking he can get some new ideas"

" I have not taken even one degree holder for any of my industry, because very useful boys without college education are available".

– நம் நாட்டுக் கல்லூரிகளையும் கல்வியமைப்பையும் இவர் மிகவும் கண்டிக்கின்றார். "மாந்த அறிவை இழக்கவைக்கின்றவை என்றும், கனவுகளை விளைவிப்பவை என்றும், ஒன்றைக்கூட உருப் படியாக–வாழ்க்கைக்குப் பயன்படும்படி கற்றுக் கொடுக்காத வெறும் கட்டடங்கள் என்றும், அங்குப் படிக்கின்ற மாணவர்கள் தம் படிப்புக் காலம் முடிந்து வெளி வருகையில் ஒன்றுக்கும் பயன்படாதவர்களாக வெளி வருகின்றார்கள்" என்றும் கடுமையாக இவர் கருத்துக் கொண்டி ருக்கின்றார். இத்துணையளவு நம் கல்வி முறையைக் கண்டிக்கும் இவர், மாணவர்கள்மேல் கொண்டிருக்கும் அக்கறை அளவற்றது. நூற்றுக் கணக்கான மாணவர்களை இவர் வெளி நாடுகளுக்கு அனுப்பியும், ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கியும் அவர்கள் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளார். இவர் உள்நாட்டில் அமைத்துக் கொடுத்த கல்விக் கூடங்கள் பல. ஏறத்தாழ 40, 50 கல்வி நிலையங்களுக்குப் பள்ளிக்கூட உந்துகளை நன்கொடை யாக அளித்துள்ளார்.

வானியல், கணியம், காந்தவியல், பொறியியல், மெய்யறிவு, சித்த மருத்துவயியல், சமயம், இசை முதலிய எந்தத் தலைப்பிலும் இவர் மணிக்கணக்காக, நாள் கணக்காக, மாதக் கணக்காகச் சொற் பொழிவாற்றும் வல்லமை படைத்த இப்பேரறிஞர், நம் நாட்டு மக் களாலும் அரசினராலும் ஒரு சிறிதும் போற்றப் படாமல் இருப்பது பெரும் குற்றமும் இழுக்குமாகும். இவரைப் போற்ற விட்டாலும் இவர் கண்டுபிடித்த பொருள்களுக்கும், செய்யப் படுகின்ற தொழில் முயற்சிகளுக்கும், துணை நிற்க வேண்டாவா? பொருள் உதவி ஏதும்

எவரிடமும் இவர் எதிர்பார்த்து நிற்கவில்லை. 50 வருடங்களுக்கு முன் வெறும் உந்துவண்டி ஒட்டுநராக இருந்த இவர், உலகமே வியக்கின்ற அளவில் அறிவியல் – தொழிலியல் – வேளாண் துறைகளில் பல பெரிய புரட்சிகளே செய்துள்ளாரெனின் இவர் வியத்தரு ஆற்றல் மதிப்பிடக் கூடியதா? இவர் செய்த புதுமைகள் கொஞ்சமா ?

மூன்றடி வளரக்கூடிய துவரைச் செடியை 14 அடி உயரமுள்ள மரமாக வளர வைத்து, ஏராளமான காய்களை உண்டாக்கிக் காட்டினார் 2,3 அடி உள்ள பருத்திச் செடியை 10, 12 அடி வளர வைத்து ஒவ்வொரு செடியிலும் 50க்கு மேற்பட்ட காய்களை விளைவித்துக் காட்டினார் இவர் செய்த வேதியல் மாற்றத்தால் சோளம் 18½' உயரம் வளர்ந்து மரமானது. 26 கிளைகள் அதில் கிளைத்தன. 39 கதிர்கள் விளைந்தன. அத்தகைய ஒரு செடியில் உள்ள தண்டுகளின் மொத்த நீளம் 181' ஒரு கோசுப்பூச் செடியை 5 அடி உயரம் வளர்த்து, பூவை 1 அடி விட்டமுடையதாக பூக்கச் செய்துள்ளார். ஒரு விரற்கடையில் 200– இல் ஒருபங்குக் கனமுள்ள எஃகுத்தகட்டால் இவர் செய்யும் மழிதகடு (Shaving Blade)களைக்கொண்டு இருநூறு முறை மயிர் மழித்துக் கொள்ளலாம். இங்கிலாந்தும், செருமனியும் இவர் கருவிகளைப் போட்டியிட்டுக் கொண்டு வாங்கக் காத்திருக்கின்றன. இருப்பினும் நம் நாட்டு அரசினர் மட்டும் இவருக்குத் தேவையான மூலக்கருவிகளைத் தருவித்துக் கொள்வதிலும், நாட்டுக்குத் தேவையான பொருள்களைச் செய்வதிலும் இவருக்குப் பெருந்தடையாக இருக்கின்றனர்.

அரசினர் இவர் அறிவு வளர்ச்சிக்கும் தொழில் முன்னேற்றத்திற்கும் போட்ட முட்டுக்கட்டைகள் ஒன்றிரண்டல்ல; ஒரு முறை ஒரு சிறந்த தொழிலமைப்புக்கு 10 இலக்க உருபா மதிப்புள்ள பொறிகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ள இவருக்கு அரசு இசைவு தந்தது. அந்தப் பொறிகளைத் தருவிக்கவும், அத்தொழிலில் வல்லுநர் சிலரை மேனாடுகளினின்று வருவிக்கவுமே நான்கு ஆண்டுகள் சென்றன. இத்தனையும் செய்து முடித்தபின் அத்தொழிலுக்கு இன்னும் தேவையான 15 அல்லது 20 ஆயிரம் மதிப்புள்ள சில சிறு சிறு கருவிகளை வெளிநாட்டிலிருந்து தருவிக்க வேண்டியிருந்தது. ஆனால் அப்படிச் செய்ய அரசு இசைவு தரவில்லை. அதுபற்றிய மடல் தொடர்பில் 3 ஆண்டுகள் அரசினருடன் இவர் போராடியபின் 2, 3 ஆயிரம் உருபா மதிப்புள்ள கருவிகளையே வாங்கிக்கொள்ள அரசினர் ஒருவாறு இசைவு தந்தனர். இந்த ஏழெட்டு ஆண்டுகளில் செலவழிக்கப்பட்ட பொருள்களும், தருவிக்கப்பட்ட பொறிகளின் சேதமும்

ஏராளம். அதன்பின் அத்தொழிலைத் தொடங்க வழியில்லாமலேயே போயிற்று. இவ்வாறு இன்னொரு முறை 2 இலக்கமுள்ள பொருள்களைத் தருவிக்க இசைவளித்த அரசினர், 10 அல்லது 15 ஆயிரம மதிப்புள்ள வேறு சில இன்றியமையாப் பொருள்களைத் தருவித்துக் கொள்ள இசைவு தரவேயில்லை. இதனால் சில இன்றியமையாத பொருள்களைச் செய்யும் தொழிலைத் தொடங்க முடியாமலேயே போய் விட்டது.

இன்னொருகால், அரசினரிடம் திரைப்படச் சுருள்களைச் செய்ய இசைவு கேட்டார். வெளிநாட்டார் செய்வதைவிட உயர்ந்த தரமுள்ள படச்சுருள்களைச்செய்ய இவர்உறுதிகொடுத்தும், அரசினர் அத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்களைத் தருவிக்க இசைவே தரவில்லை. எனவே இன்னும் நமக்குத் தேவையான படச் சுருள்களை வெளிநாட்டிலிருந்தே தருவிக்கவேண்டிய அவலநிலையில் உள்ளோம். இவ்வாறே செப்புப் பொருள்கள் சிலவற்றைச் செய்யும் தொழிற்சாலை தொடங்க இவர் இசைவு கேட்டு, அரசினர் இசைவுதர மறுத்துவிட்டனர்.

ஒரு முறை கல்வித் தொடர்பான திரைப்படச் சுருள்களை அமெரிக்காவிலிருந்து இவர் கொணர்ந்தார். அதை உள்நாட்டிற்குக் கொணரச் சுங்கச் சாவடியினர் இசைவளிக்கவில்லை. எனவே அவற்றை வேண்டாவென்று துறைமுகச் சுங்கச் சாவடியிலேயே போட்டுவிட்டு அரசினர் இசைவுக்குக் காத்திருந்தார். அரசினரோ இசைவு தரவில்லை. மாறாக ஒன்றரை ஆண்டுக்குப்பின் அப் பொருள்களுக்குரிய சுங்கச் சாவடிக் கிடங்குக் கட்டணமாக உருபா 45,000கட்டவேண்டுமென்று அதிகாரிகள் இவருக்கு ஆணையிட்டனர். இவ்வாறு அரசினர் இவருக்குத் தந்த – தருகின்ற தொல்லைகள் அளவிடற்கரியன. அரசினர் போடும் பொருளியல் திட்டங்கள் பெரும் மோசடியும் அறியாமை வாய்ந்ததுமாகும் என்று இவர் குறிப்பிடுகின்றார். "இப்பொழுதுள்ள திட்டங்கள் யாவும், வெளிநாட்டுக் கடன்களையும், அன்பளிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டே போடப் பட்டவையாகும். அவை நாட்டைப் பொருளியல் துறையில் பெருத்த சீர்கேட்டுக்கே ஆளாகியுள்ளன. 300 கோடி உருபா வரை இத்திட்டங்களுக்கு அரசு செலவிட்டபின்னும், பயன் குறைவாகவே உள்ளதென்றால், நம் திட்டங்கள் மிகவும் பிழையானவையே என்று வெளிப்படையாகத் தெரிந்துகொள்ள வேண்டாவா ?" என்று இப்பேரறிஞர் கேட்கின்றார்.

இவரின் வருமானங்களைக் கற்பனை செய்துகொண்டு இவருக்குப் போடும் வரிகளோ கணக்கு வழக்கில்லை. "வரி முதலையின் வயிற்றிலிருந்து நான் வெளி வந்தது உண்மையேயாயினும் மிச்சம் எலும்பும் தோலுந்தான்." என்று இவர் வெளிப்படையாக எழுதி வைத்துள்ளார். இவர் தொழிற்சாலைகளை அமைத்துள்ள முறைகளும், அங்கு உள்ள தொழிலாளர்களுக்குக் கொடுத்துள்ள ஊக்கமும், அங்குக் கையாளப்படும் ஆளுமையும், ஒழுங்கும், கட்டுப்பாடும் மேனாட்டாரும் பார்த்து மூக்கின்மேல் விரலை வைக்கும் தகையன. தொழிலகங்களின் சுவர்களில் ஆங்காங்கு இவர் எழுதி வைத்துள்ள ஆங்கில அறிவுரைகளும், அறிவிப்புப் பலகைகளும் போவார் வருவார்க்குப் புத்துணர்வு ஊட்டிக்கொண்டுள்ளன. அவற்றில் சிலவற்றின் மொழி பெயர்ப்புகள் கீழே வருமாறு :

"நினைவில் வையுங்கள்! இளமையே கல்விக்குச் சிறந்த பருவம்"

"பொறியியல் ஒரு மந்திரமில்லை. குறைந்த செலவில், சிறிய பரப்பில், குறுகிய காலத்தில், குறைந்த முயற்சியில் இங்கே கற்றுக் கொள்ளுங்கள்!"

"இங்குக் கற்பது எளிது. பொருள், திறம், காலம் எதுவும் இங்கு வீணாக்கப்படுவதில்லை."

"ஒன்றைத் தோற்றுவித்தல் (உற்பத்தி) கடினமானதன்று. அஃது இயற்கையானலும் தானே அமைதுவமாகும். அதைப் பராமரிப்பது (Maintenance) தான் மிகவும் கடினம்"

"நீ பண்படாதவரை, பிறரிடம் பண்பாட்டை எதிர் பார்க்க முடியாது"

"உலகம் முழுவதும் அறிவு நிரம்பியுள்ளது. அவ்வறிவுடன் உன் அறிவை ஒப்பிடுகையில், உன் அறிவு அதன் ஓரணுவினும் அணுவுக்குச் சமம் ஆகாது"

இளைஞர் உள்ளங்களைப் பேயாய் ஆட்டி அலைப்பவை: புகையிலை, திரைப்படக் கொட்டகை, அரசியல், பயனற்ற செய்தித்தாள்கள், கடன்கள் முதலியன. இவற்றைக் கனவிலும் நினையாதீர்கள்"

"18 அகவை (வயது)க்குப் பின்னும் இளைஞர்கள் பெற்றோரிடமோ மற்றோரிடமோ உதவியை எதிர்பார்ப்பது கொடிய கரிசு (பாவம்)"

"இளைஞர்களின் பகைவர்கள் யார்தெரியுமா? அவர்களின் பெற்றோர்கள், அரசியல், திரைப்படங்கள், பகையிலே செய்தித்தாள்கள், கதைகள், ஒழுக்கமின்மை முதலியவையே"

அறிவு பெற எப்பொழுதும் 5 வினாக்களை நீங்கள் கேட்டுக் கொண்டே இருங்கள். அவை: என்ன, ஏன், எப்பொழுது, எங்கே எது?" என்பவை.

"அறி; ஈட்டு; செலவழி." "எந்தக் கல்வி நிலையமும் உங்களைப் பொறிபியலிலே முழுமையான அறிவுடையவராக்காது. நீங்களாகவே தாம் உங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

"இங்கே எச்சில் துப்பினாலும், குப்பைகளைப் போட்டாலும், இந்தக் கட்டடத்தை ஒரு நாள் முழுவதும் தூய்மை செய்து கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு பிறர் செய்வதை நீங்கள் பார்த்து, 10 நிமையத்திற்குள் அலுவலகத்தில் தகவல் கொடுக்காமற் போனாலோ இங்குள்ள இடங்களை இரண்டு நாளைக்குத் தூய்மைசெய்ய வேண்டும்."

எப்படி அறிவுரைகள்? இப்படிப்பட்ட இடமும் தொழிற் கூடங்களும் எப்படி இருக்கும்? அங்குள்ளவர்கள் எப்படி இருப்பார்கள்? அவர்களை இயக்கிக் கொண்டிருக்கும் பேரறிஞர் எப்படிப் பட்டவராக இருப்பார்? கற்பனை செய்து கொள்ளுங்கள். அவர் வாழும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று பெருமிதம் கொள்ளுங்கள். ஆனால் அவரைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல்—அவரின் பேரறிவை நாம் பயன் படுத்திக் கொள்ளாமல் நாமும் நம் அரசினரும் இருக்கின்றோம் என்று வெட்கப்பட்டுக் கொள்ளுங்கள். அதற்காக உங்களையே ஒரு முறை காறி உமிழ்ந்து கொள்ளுங்கள்.

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாக இருப்பவர்கள் இங்குள்ள அரசியல் தலைவர்களே! இந்நாட்டிலுள்ள முதல் அமைச்சர்களையும், தலைமை அமைச்சரையும் சிறையில் போட வேண்டும். அப்பொழுதுதான் நம் நாட்டுக்கு விடிவு ஏற்படும்" என்று புரட்சிக் கனல் கக்கும் இப்பேரறிஞர்க்கு, இந்நாடு துணை நிற்காமல் புறக்கணிக்கும் குற்றத்திற்கு எதிர்காலத்தில் தக்கதண்டனை பெறக் காத்திருக்கின்றது. வாழ்க கோ. துரைசாமி (நாயுடு) அவர்களின் பேரறிவும் பேரியமையிரா!

— பெருஞ்சித்திரன்

Bharathidasan.

ஆங்கில மொழியாக்கம்

DARKNESS.

People spend a busy day. They wander here and there and quarrel. They eat and drink. And then they are weary. So are the other living creatures. You hurry to comfort them, embracing them with your dark-blue wings, O darkness! You are an embodiment of love. You have our thanks.

I see your wonderful body reaching out to heaven. You change your garments frequently. You wear a golden saree during the day and your night dress is made of white silk woven with wonderful patterns.

I once asked the sun where he was going. "To destroy darkness" he said. "Then hurry up" I said. He followed you. He thought that you would vanish soon. But how could that be? You are like water flowing everywhere and the sun just a beatle beating his wings in that water.

O darkness that lets out thieves, hear this tale: The other night, the children were sleeping. My wife stood near me, but my mind dwelt apart. When I raised my head you stood there before me - your tall figure hovering over me and your beautiful eyes gazing at me. You were wearing a shawl inset with pearls. In your dark hair I saw the cool crescent moon adorning you like a diamond hair-pin. My heart, badly stirred, had memories and turned towards my wife.

You were born in the sky. And then like fish that breed in seas, the living-things were born. You permeated everywhere. Wherever there is [an object there is a shadow; is there not? You are found in the pot. You are in every particle of the milk.

You are there on both sides of the beautiful sharp nose. You dwell in corners of the fish-like eyes of damsels. You are at the edges and cavity of the ear. You do give shape to a woman's face; you make it identifiable. O darkness, painters know your worth.

You are lying under the patals of the lotus. You are contrasting petal with petal. Otherwise there will be no beauty. O darkness, you add the touch of beauty to everything.

Knowledge is light and ignorance darkness. Ignorance brings about knowledge. Can there be ignorance where knowledge is?

A scorpion stung a boy the other night. There was no light; no matches. People groped in the darkness. Before matches could be got, there were eight more people stung by the scorpion. O darkness, you gave them a good lesson about the need for cleanliness. You are indeed great.

பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.

புலவர் பெருமை

புலவர் : திருமேனி. நாகராசன், காரைக்கால்.

இந்நூற்ருண்டில் தமிழும் தமிழரும் ம று ம ல ர் ச் சி யு ற் று மேலோங்கி வருதலைக் கண்டு பொருத காட்டிக் கொடுக்குந்தமிழர், நந்தமிழகத்தில் சிலர் உளர். அவர் அரசியல், குமுகாய மேலாண்மை. மிக்காரெனில் இழுக்கா து. அவ்வப்போது பேச மேடையும், எழுதத் தாளிகையும் கிட்டி விட்டால் அவ்வீடணத்தமிழர் தமிழையும் தமிழ்ப் புலவரையும் தாக்காது அமைவதில்லை. அப்புல்லியர்தம் போலி உரைகட்கு நாம் செவியும் சிந்தையுங் கொடாமற் போகவே, அவர் நம்மை மாறுபடக்கொண்டு மேலும் தமிழையும் தமிழ்ப் புலவரையும் தாக்குதலில் முடுகி ஈடுபட்டுள்ளனர். எனவே அப்போக்கிலர் தம் வெற்றுரைக்குத்தக்க மறுப்பளித்து உண்மையை உலகுக்குக் காட்டல் நங் கடனுயிற்று என்க.

தமிழச்சிக்குத் தோன்றித் த மி ழை வெறுத்து ஆங்கிலத்தில் உயர்நிலைக் கல்வி பெற்றுத் தமிழையும் தமிழ்ப் புலவரையும் காட்டிக் கொடுக்கும் அவரின் கருத்துத்தான் யாதெனில் கீழே தருதும்காண்க:-

க. தமிழ்ப் புலவரெல்லாரும் தலை கொழுத்தவர்.
உ. புலவர்களுள் ஒருவர், மற்ருெருவர் வாழப்பொருர்.
ங. புலவர்க்குத்தொழில் தம்முள் போரிட்டுக்கொள்ளுதலே,
ச. புலவர்கள் வேந்தர்களுக்குள் சண்டைமூட்டி விடுவர்.
ரு. புலவர்க்குப் பாடத்தான் தெரியும்; ஆட்சியைப் பற்றி அவர்கட்கு என்ன தெரியும்?

பிறவும் உளவாயினும் அ வை யெ ல ா ம் இவற்றுள் அடங்கு மா தலின் அவரின் அடிப்படைக் கரணியங்கள் ஈண்டு மறுக்கப்பெறும்

முத்தமிழ் கல் தோன்றி மண்தோன்ருக் காலத்தே முன் தோன்றி மூத்தது; அது காலவாராய்ச்சிக்கு எட்டாத செம்மாப் புடையது; பிற மொழிகட்கு இல்லாப் பண்பு பலவும் உடைத்து. தொன்மை, முன்மை, தாய்மை, தூய்மை, தனிமை, இனிமை, வளமை, இளமை ஆகிய எட்டுத் தனிப்பண்பும் உடையது என்க. முன்னைப் பு து மை க் கு ப் புதுமையாயும் பின்னைப் பழைமைக்குப் பழைமையாயும் இலங்கி

வருவது. இத்துணைச் சிறப்பமைந்த செந்தமிழைக் கற்றுத்தேர்ந்த புலவன் செம்மாந்திருத்தல் இயல்பேயாம். விண்வெளியில் பறந்த மாந்தனின் பெருமிதம் போல, நோபல் பரிசு பெற்றாரின் செருக்குப் போலத் தமிழைத் தேர்ந்த புலவனும் பெருமிதங்கொள்ளல் இயல்பே! அப்பெருமிதத்தைச் செருக்கெனினும் தலைகொழுத்தத் தன்மையெனினும் எங்ஙனம் கொள்ளினும் கொள்க. சில நூற்றாண்டுகட்கு முன் தோன்றிய கலவை மொழியாகிய ஆங்கிலம், பிரெஞ்சு கற்றார் செருக்குற்றுத் திரிதலை வெளிப்படையாகக் காணலாம். அங்ஙனமாக ஒப்பில் ஒண்டமிழ் கற்ற புலவன் பெருமிதங் கொள்ளுதலில் தீதின்றன்றே. ஆனால், தமிழ்ப் புலவன் இயல்பு நிலையில் நின்று தமிழைத் திறம் வியந்து பாராட்டுவது கண்டு புன்மையாளர் "தமிழ்ப் புலவர் தலைகொழுத்தவர்" என்பர். அவர் கருத்துக் கடலிடைப் பட்ட கனலாம். புலவர் வாழ மற்றொருவர் பொறார் என்பது இரண்டாங் குற்றச்சாட்டு. புலவர் தம்முள் ஒருமை கொண்டு கூடித் தமிழ் ஆய்ந்தமை ஒன்றே அவரது பரந்த மனப் போக்கிற்குச் சான்றாகும். அங்ஙனம் கூடித் தமிழ் ஆய்ந்தமை முக்கழக வரலாற்றால் அறிக. புலவர் ஒருவர் தம் செம்மாப்புக் காட்டித் தக்க புரவலரிடம் பொருள் பெற்று வருவழி போகூழால் நல்குரவுற்று வரும் வேறொரு புலவரை எதிர்ப்பட்டு அவரைத் தாம் பொருள் பெற்று வந்தானிடம் போகுமாறு ஆற்றுப் படுத்துவர். இதனைப் "புலவராற்றுப்படை" என்பர் பெரியோர். இதனால் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் மாண்புறு மனப்போக்குடையர் புலவரென்பது புலனும். அரசன்பால் பொருள் பெற்றுவந்த புலவர் தாமே வைத்துண்டு வாழாமே எல்லார்க்கும் பகுத்துக் கொடுத்துண்டு வாழ்வர். இதனைக் குமணன் பால் பொருள் பெற்று வந்த பெருஞ்சித்திரனார் தம் இல்லாளிடம் கூறியவாற்றான் அறியலாம். என்னை?

\+ "நின்னயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது

\+ புறம், பாடலெண் : 163.

வல்லாங்கு வாழ்து மென்ஞது நீயும்
எல்லார்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே''

என்பதனுல் அறிக. இனி இளந்தத்தன் நலங்கிள்ளிபால் சென்று பின் அவனேடு பகை கொண்ட நெடுங்கிள்ளிபால் சென்றபோது அவரை ஒற்றரெனத் திரியக் கொண்டு கொல்லப் புகுந்தபோது உடன் கோவூர் கிழாரென்னும் புலவர் உடுக்கை இழந்த கையினும் சாலவிரைந்து, புலவரின் பெருமிதச் சிறப்பைப் புலப்படுத்தி அவரைக் காத்தார். என்னை

* ''வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்ஞது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்ருே வின்றே,திறப்பட
நண்ணூர் நாண வண்ணுந் தேகி
ஆங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணுள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே''

என்னும் பாட்டான் அறிக. இவ்வாறு புலவர்கள் பொதுநலம் போக்குடையராகி அழுக்காறு அற்றவராய்ப் பகுத்துண்டு பல்லுயர் ஓம்பிப் பிறர் வாழத் தாமும் வாழ்ந்தனர் என்பது பெற்ரும். இதனுல் ''புலவர் பிறர் வாழப்பொருர்'' என்ற மக்கட் பதடி கூற்று மண்ணுதல் காண்க.

'' புலவர்க்குத் தொழில் தம்முள யாண்டும் போரிட்டுக் கொள்ளலே '' என்பதும் நெறியின் நீங்கியோர் கருத்தே. புலவர் தம்முள் யாண்டும் போரிட்டுக்கொண்டதாகச் சான்று இல்லை. இதனைப் புறங் கண்டு புன்மையாளர் புரிந்து கொள்க. தமிழ்ப்புலவர் தம்முன் விழுமிய கிழமை பூண்டு யாண்டும் ஒழுகினர் என்பதே தேற்றம். அவர்கள்

* புறம், பாடலெண் : 47.

பண்புடைக் கொள்கைச் சான்றோராய் ஒத்தது அறிந்து ஒருமைப்பாடு கொண்டு வாழ்ந்திருந்தனர்; உண்மைப் புலமையை உச்சிமேல் வைத்து மெச்சிப் புகழ்ந்தனர்; ஒருவர் பெருமையை மற்றவர் வியந்து நின்றனர். என்னை, கபிலரென்னும் பெரும் புலவரைப் புலவர் பல்லோர் †போற்றிப் புகழ்ந்து பாடி உள்ளனர்.

"அரசவை பணியவறம் புரிந்து வயங்கிய
மறல்புரி கொள்கை வயங்கு செந் நாவின்
உவலை கூராக் கவலையி னெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்"

எனப் பெருங்குன்றூர்கிழாரும்,

* "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்"

எனப் பெருந்தியிளங் கீரனாரும்,

£ "புலனழுக் கற்ற வந்த ணாளன்
இரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப்
பரந்திசை நிற்பப் பாடினன்"

என மாறோக்கத்து நப்பசலையாரும் பாடியமை காண்க. இனி பெருஞ்சித்திரனார் குமணனின் வண்மையை வியந்து பாராட்டும்போது

[1] "திருந்துமொழி மோசி பாடிய ஆயும்" என்பார்,

திருந்துமொழி என்னும் அடை ஏணிச்சேரி முடமோசியாரைச் சிறப்பித்து நின்றது. இதனான் பெருஞ்சித்திரனார் முடமோசியார் மாட்டுக் கொண்டிருந்த பேரன்பு புலப்படுமாறு அறிக. அக்கபிலரும் இருங்கோவேளின் முன்னோன் புலவர் கழாத்தலையாரை இகழ்ந்த காரணியத்தால் அவனது நகரமாகிய அரையம் அழிவுற்ற சிறப்புடைமை கருதி அப்பெரும் புலவரின் பெருமை கண்டு வியந்துரைத்தார். என்னை,

° "கோடிபல வடுக்கிய பொருணுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி

† பதிற்றுப்பத்து, எண்: 85.
* புறநானூறு, எண்: 53.
£ புறநானூறு, எண்: 126,
[1] புறநானூறு, எண்: 458.
° புறம், பாடலெண் : 202.

நுந்தை தாய நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
நும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையரை
இகழ்ந்ததன் பயனே"

என்பதனுன் அறிக. தலைமை நட்புக்கு இலக்கணமாக் எடுத்தாளப் பெறும் கோப்பெருஞ் சோழன் மடிய, உடன் பாண்டிநாடு நீத்துச் சோணுடு புக்கு வடக்கிருந்து ஆவி ஒட்ட, பிசிராந்தையாரைப் பொத்தி யாரும், கண்ணகனாரும் மருட்கையுற்றுப் பாராட்டிய பாடல்களை முறையே வருமாறு காண்க.

* "நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்
அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்
தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
இசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே
அதனால், தன்கோ லியங்காத் தேயத் துறையும்
சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னோனை யிழந்தவிவ் வுலகம்
என்னா வதுகொ லளியது தானே"

௮ "பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே"

* புறம், பாடலெண் : 217. ௮ புறம் பாடலெண் 218.

இவ்வாறு விளங்க வருமாற்றான் புலவர் பெருமக்களின் புரையில் வன்மை நன்குபுலப்படும். புலப்படவே தமிழ்ப்புலவர் தம்முள் ஒருமைப் பாடு கொண்டு ஒத்த உணர்ச்சி உடையராய்ப் பண்புடைப் பெருமக்க ளாகப் பாரினில் சிறந்திருந்தமை அறியவரும். வரவே, புலவர் மாட்டுப் புன்மொழி பெய்துரைத்த பேடியர் எனைத் துணையராயினும் என்னும் என்க. (தொடரும்)

அன்பளிப்புக்கு நன்றி

தென் மொழியின் வளர்ச்சிக் கென கீழ்க்காணும் அன்பர்கள் விடுத்த நன்கொடைகள் வரப்பெற்றோம். அவர்களுக்கு எங்கள் அன்பு கலந்த நன்றி :

1. திரு. இரா. நக்கீரன். நெய்வேலி-1 3-00
2. திரு. அழகிரிசாமி. பஞ்சாபு 5-00
3. திரு. செல்லராமு. கல்லுப்பட்டி. 2-00

தமிழ்ச் சிட்டு

- 'தென்மொழி' வெளியிடும் குழந்தைகளின் தனித்தமிழ்க்கலை இதழ்! மாத வெளியீடு.
- 20 பக்கங்கள் — 15 காசு.
- அறிவியல், மொழிப்பயிற்சி, வரலாறு, உலகச் செய்திகள், சிறுகதைகள், துணுக்குகள், புதிர்கள் முதலிய எண்ணிறந்த செய்திகள்.

உங்கள் குழந்தைகள் படிக்கின்றனவா ?

இல்லையேல் அவர்களை இன்றே உறுப்பினர்களாக்குங்கள்.

ஆண்டுக் கட்டணம் 2 உருபா.

தமிழ்ச் சிட்டு : கடலூர்-1.

திருவள்ளுவரின் திருவுள்ளம்

கண்ணோட்டமுடைய சான்றோர் பிற உயிரின் துன்பத்தைத் தம் துன்பம்போல் கருதி உள்ளம் உருகி அத்துன்பம் துடைக்க முன் வருவார்கள். தங்கள் உயிரைக் கொடுத்தேனும் பிற உயிரைக் காப் பாற்றுவார்கள். தன்னுயிர் போவதாயினும் பிறவற்றின் உயிரைப் போக்கமாட்டார்கள். ஓர் உயிரைக் கொல்வதன் மூலம் ஒரு பெரிய நன்மை ஏற்படக்கூடும் என்றாலும் அப்படிக் கொலையால் ஏற்படும் நன்மை - அஃது - எவ்வளவு பெரிதாயினும் சான்றோர் அதனை இழிந்ததாகக் கடைப்பட்டதாகவே கருதுவார்கள்.

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிதின்
இன்னுயிர் நீக்கும் வினை — குறள் 327.

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்கு
கொன்றாகும் ஆக்கம் கடை — குறள் 328.

பகுத்தறியும் அறிவு - எண்ணிப்பார்த்து நல்லது இது தீயது இஃது என்று பிரித்தறியும் அறிவு மாந்தனுக்கு மட்டுமே உள்ளது.

மற்ற உயிரினங்களுக்கு இல்லை. இந்த அறிவைப் பெற்றிருந்தும் மாந்தன் பிற உயிரின் வருத்தத்தைத் தன் வருத்தம்போல் கருதிப் போற்றவில்லை என்றால், இந்த அறிவினால் ஆகும் பயன் ஏதாவது இருக்குமோ? என்று கேட்கிறார் திருவள்ளுவர்.

"அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை — குறள் 315.

பிறருடைய நோயையும் தன்னுடைய நோயைப்போல் கருதிப் பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமல் அறநெறியில் நின்று வாழ்வது சான்றோர்களுக்கெல்லாம் கடமையாகும்" என்கிறார் நல்லந்துவனார் என்னும் புலவர்;

"பிறர் நோயும் தந்நோய்போல, போற்றி அறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடனானால் — கலித் 139.

உலகத்தில் நான்கு வகைப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். ஒரு வகையினர் தீமையானவற்றை மனத்தால் நினைப்பார்கள்; வாயால் சொல்வார்கள்; சொல்லியவாறே தீமையானவற்றைச் செயலிலும் செய்து விடுவார்கள். இவர்கள் கடைப்பட்டவர்கள் – தீயவர்கள். இன்னொரு வகையினர், தீமையானவற்றை மனத்தால் நினைப்பார்கள்; நாவாலும் பேசுவார்கள்; ஆனால் செயலில் செய்யாமல் விட்டு விடுவார்கள். இவர்களை நல்லவர்கள் என்று சொல்லாவிட்டாலும் கெட்டவர்கள் என்று சொல்வதற்கில்லை. வேறொரு வகையினர் தீமையானவற்றை மனத்தால் நினைப்பார்கள்; ஆனால் செய்யப் போவதாக வாயால் சொல்லமாட்டார்கள் – செயலாலும் செய்யமாட்டார்கள். இவர்களை ஓரளவு நல்லவர்கள் என்றே சொல்லலாம். முழுக்க முழுக்க நல்லவர்கள் – மேலோர்கள் – என்று சொல்லத் தகுந்த மற்றொரு வகையினர் யார் என்றால் தீமையானவற்றை நெஞ்சாலும் நினையாதவர்கள் தாம். எந்த அளவும் எந்த நேரத்திலும் எப்படிப்பட்டவருக்கும் இன்னா தவற்றைச் செய்யாமல் இருக்கின்ற பண்புதான் தலையாய பண்பு ஆகும்.

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணா செய்யாமை தலை" — குறள் 317.

அந்தத் தலையாய பண்பு உடையவரே சான்றோர் ஆவர். அவர்கள் தமக்குத் தீங்கிழைத்தவர்க்கும் திரும்பத் தீங்கிழைக்க மாட்டார்கள். தீமைக்குத் தீமை செய்யாமல் தீமைக்கும் நன்மையே செய்வார்கள். தம்மீது ஒருவர் காரணமில்லாமலே சினங்கொண்டு கறுவித் தமக்குத் துன்பத்தைச் செய்தாலும் அப்படித் துன்பம் செய்தவர்க்கும் திரும்பத் துன்பம் செய்யாமல் இருப்பதே அவர்களது கொள்கையாக இருக்கும்

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு — குறள் 987.

"கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள் — குறள் 312.

"நமக்கு ஒரு தீமையும் செய்யாமல் இருப்பவருக்கு நாம் ஒரு தீமையைச் செய்வது பேய்க்குணம். நமக்கு ஒரு தீமை செய்தவர்க்கு நாம் ஒரு தீமையும் செய்யாமல் இருப்பது மாந்தக் குணம். நமக்கு ஒரு தீமை செய்தவருக்கும் நாம் ஒரு நன்மையைச் செய்வது தெய்வக் குணம்" என்று சொல்வார்கள். தீமை செய்தவர்க்குத் தீமை செய்யாமல் இருப்பதற்கு எவ்வளவோ பொறுமை வேண்டும். தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வதற்கு அந்தப் பொறுமையோடு பெருந்தன்மையும் வேண்டும். அந்தப் பெருந்தன்மையைத் தருவது கண்ணோட்டம். தண்டிக்கத் தகுந்த தீமை செய்யும் இயல்புடையோரிடத்திலும் கண்ணோட்டம் செய்து பொறுமை காட்டி நன்மையே செய்யும் தலை சிறந்த பண்பு சான்றோரிடம் அமைந்து இருக்கவேண்டும்.

"ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. — குறள் 579.

அன்பும் நாணமும் ஒப்புரவும் கண்ணோட்டமுமாகிய நான்கு பண்புகளோடு சான்றாண்மை என்பது நிறைவெய்துவதற்கு ஐந்தாவதாக ஒன்று தேவை; அதுதான் வாய்மை யென்பது. புற இருளை அகற்றுவதற்கென்று இருக்கும் விளக்கைப்போல் அக இருளை அகற்றுவதற்கென்று இருப்பது வாய்மையாகும். உலகத்திலிருக்கும் இருளை நீக்கும் விளக்குகள் எல்லாம் சான்றோர்க்கு விளக்கல்ல. உள்ளத்திலிருக்கும் இருளை நீக்கும் விளக்காகிய பொய்யாமையே அவர்களுக்கு விளக்காகும் என்கிறார் திருவள்ளுவர்.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு - குறள் 299.

திருமணம் செய்து வைப்பதை இப்போது விளக்கேற்றி வைப்பது என்று நாம் சொல்லுகிறோம். ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு விளக்கேற்றி வைப்பது - ஒரு திருமணத்தை முடித்து வைப்பது - நல்லது என்று நாம் சொல்கிறோம். சான்றோரின் நோக்கத்தின்படி பார்த்தால் திருவள்ளுவரின் கருத்துப்படி பார்த்தால் ஆயிரம் பொய் சொல்வது என்பது ஆயிரம் விளக்குகளை அதிலும் மெய்யான சிறந்த விளக்குகளை அணைப்பது என்று பொருளாகும். ஆயிரம் பெருவிளக்குகளை அணைத்து விட்டு ஒரு சிறு விளக்கை ஏற்றி வைக்கலாமா? அப்படி ஏற்றி வைப்பது சிறந்த செயலாகுமா? என்று நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். திருக்குறளை நாம் மறந்திருந்தால் எப்படித் தமிழ் நெறிக்கு மாறாக ஒரு பழமொழியே நம்மிடம் வந்து இன்று உலவி வருகிறது என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

மாந்தன் வெறுத்து விலக்க வேண்டிய இரு பெரும் தீமைகள் என்று திருவள்ளுவர் குறிப்பிடுவனவற்றுள் ஒன்று கொலை செய்வது, இன்னொன்று பொய் சொல்வது. முதலாவதாகக் கொலையைத் தவிர்க்க வேண்டும். இரண்டாவதாகப் பொய்யை விலக்கவேண்டும் என்கிறார் அவர்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றதன்
பின் சாரப் பொய்யாமை நன்று - குறள் 323.

பொய் பேசாமல் இருப்பதே ஒரு பெரிய அறமாகும்; பொய் பேசுவதை ஒருவன் விடாமல் வேறு எந்த அறங்களைச் செய்வதிலும் பயனில்லை. பொய்யை விட்டுவிட்டபின் தான் மற்ற அறங்களைச் செய்ய வேண்டும். ஒருவனால் மற்ற அறங்களைச் செய்ய முடியவில்லை என்றாலும் இந்த ஓர் அறத்தையாவது அவன் கட்டாயம் செய்யவேண்டும். அவன் பொய் பேசாமல் இருக்க வேண்டும் என்கிறார்.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று - குறள் 297.

யாம் மெய்யாகக் கண்டவற்றில் எல்லாம் வாய்மையை விடச் சிறந்ததான ஒன்று - வாய்மையை விட நல்லதான ஒன்று என்று சொல்லத்தகுந்தது வேறு எதுவும் இல்லை என்கிறார்.

"யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற — குறள் 300.

வாய்மை என்றால் என்ன என்பதற்கும் அவர் விளக்கம் தருகிறார். வாய்மை என்று சொல்லப்படுவது எஃது என்றால் தீமையான எந்த ஒன்றையும் தீமைபயக்க வல்ல எதனையும் – சொல்லாமல் இருத்தல் என்கிறார்.

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல் — குறள் 291.

தீமை தருவனவற்றைச் சொல்லாமல் இருப்பதற்கு மனம் தூய்மையாக இருக்க வேண்டும். மனத்தில் பொறாமைக்கோ, ஆவலுக்கோ, சினத்துக்கோ இடமில்லாமல் மனம் மாசற்று இருந்தால்தான் வாயிலிருந்து வெளிவரும் சொற்கள் யாருக்கும் தீமை செய்யாதனவாக இருக்கும். மனம் மாசு அற்று இருப்பதுதானே அறம் என்பது

"மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற —குறள் 34.

வாய்மையைக் கடைப் பிடிக்காமல் மனமாசற்ற நிலையாகிய அறவுணர்வு என்பது இல்லை. உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்ள தண்ணீரில் குளிக்கவேண்டும். உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வாய்மையைப் போற்ற வேண்டும். புறத்தூய்மை என்பது நீரால்தான் உண்டாகும். அகத்தூய்மை என்பது வாய்மையால் தான் உண்டாகும்,

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும் – குறள் 298.

மனம் தூய்மையாக இருந்தால்தான் மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று மயங்கும் அறியாமையாகிய மயக்கம் இல்லாமல் இருக்கும். இந்த மயக்கத்திலிருந்து விடுபடுவதே மெய்யுணர்தல் ஆகும். மெய்யுணர்வு பெறுதலே பேரின்பமாகும். பிறப்பு இறப்பற்ற, விருப்பு வெறுப்பு அற்ற, இன்ப துன்பங்கள் அற்ற உயரிய நிலைக்கு நம்மை அழைத்துச் செல்வது மெய்யுணர்வுதான். மெய்யுணர்வு பெற்ற பேரறிவாளர்கள் ஓட்டையும் செம்பொன்னையும்

ஒன்றுகவே கருதிப்பார்ப்பார்கள். அவர்கள் யாரையும் தூற்றமாட்டார்கள்; யாரையும் போற்றமாட்டார்கள். கணியன் பூங்குன்றனுர் என்னும் புலவர்

' யாதும் ஊரே யாவரும் கேளிர் '

என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் குறிப்பிடுவது போல், அவர்கள், இந்த உயிரும் உலகுமாகிய வாழ்க்கை ஆற்று நீரோட்டத்தில் எதிர்த்து நிற்க இயலாமல் செல்கின்ற புணையைப் போல் – தெப்பத்தைப்போல் ஒரு முறையில் நின்று இயங்குகிறது என்னும் உண்மையை அறிந்தவர்களாகையால் பெரியவர்களை வியந்து போற்றவும் மாட்டார்கள். சிறியவர்களை இகழ்ந்து தூற்றவும் மாட்டார்கள்.

"பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே –புறம் 192.

என்று எல்லாரையும் தழுவி அணைத்துச் செல்பவர்களாக இருப்பார்கள். அவர்களே ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்களாவர்.

நோன்பு என்பது எந்த உயிரையும் கொல்லாமை என்னும் பண்பை அடிப்படையாகக் கொண்டு விளங்குவதுபோல் சான்ருண்மை என்பது பிறருடைய தீமையை எடுத்துரைக்காத – பிறர்க்குத் தீமை யானவற்றைச் சொல்லாத வாய்மையாகிய நல்ல பண்பையே அடிப்படையாகக்கொண்டு விளங்குவதாகும்.

"கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு – குறள் 884.

இவ்வாறு வீட்டிலும் வெளியிலும் அன்போடு பழகி, செய்யக்கூடாத செயல்களைச் செய்வதற்கு நாணிச் செய்யாமல், தனக்கென்று மட்டும் வாழாமல் பிறர்க்கும் உதவியாக வாழும் ஒப்புரவாளராக இருந்து தன்னுயிர்போல் பிற உயிரை எண்ணி இரங்கித் தனக்குத் தீங்கு செய்தவர்க்கும் தீங்கு செய்யாத கண்ணோட்டம் உடையவராய், வாய்மையைப் போற்றி மனத் தூய்மையோடு மெய்யுணர்வு பெற்ற சான்றோராய் வாழ்வதற்கே மாந்தப் பிறவி யெடுத்த நாம் ஒவ்வொருவரும் முயல வேண்டும் ; முயன்று வெற்றி பெறவேண்டும்.

வாழ்க்கையில் நாம் எப்படி யெல்லாமோ உயரவேண்டும் என்று எண்ணுகிறோம். பெரிய அதிகாரியாக வேண்டும் என்று எண்ணுகிறோம் பெரும் பணக்காரராக வேண்டுமென்று எண்ணுகிறோம். பெரிய தலைவராக வேண்டும் என்று எண்ணுகிறோம். பெரும் பெரும் பதவிகள் எல்லாம் நமக்குக் கிடைக்க வேண்டுமென்று எண்ணுகிறோம். ஆனால் நாம் எண்ணியவற்றை யெல்லாம் எண்ணியபடியே நம்மால் பெற முடிவதில்லை. காரணம் அவை நம் கையில் இல்லை. நம் கையில் இருப்பது மனம் ஒன்றுதான். அந்த மனத்தை நாம் நினைத்தவாறே அடக்கி ஆளலாம்; பண்படுத்தலாம்; தூய்மையாக்கலாம். எனவே நாம் சான்றோர் ஆவது என்பது நம் கையில் இருக்கிறது. நாம் சான்றோர் ஆகவேண்டும் என்று எண்ணினால் – உறுதியாக எண்ணினால் கட்டாயம் சான்றோராக முடியும்.

எல்லாரும் இந்த நாட்டின் தலைவராக விரும்பினால் அது முடியுமா? எல்லாரும் அமைச்சர்களாக விரும்பினால் அது முடியுமா? எல்லாரும் அதிகாரிகளாக விரும்பினால் அது முடியுமா? எல்லாரும் எழுத்தாளராக விரும்பினால் – பேச்சாளராக விரும்பினால் அது முடியுமா? நம்மில் சிலர் தான் தலைவர்களாக முடியும்; அமைச்சர்களாக முடியும்; அதிகாரிகளாக முடியும்; எழுத்தாளராக முடியும்; பேச்சாளராக முடியும். ஆனால் எல்லாருமே இந்த உலகத்தில் மக்களாகப் பிறந்திருக்கும் அனைவருமே – எந்த நிலையில் இருப்பினும் விரும்பினால் சான்றோராகலாம். மக்கள் எல்லாருமே சான்றோராகவேண்டும் என்பதுதான் திருவள்ளுவரின் திருவுள்ளமாகும். – முற்றும்.

தென்மொழி கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7–25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

: மணிவேலன் :

பெண்மை எங்கே?

ஆணொருவன் தொலைவினிலே வரக்கண்டால் அழகுடைய
அணங்கு, மிக்க
நாணுற்று மேலாடை தனைத்திருத்தி முகம்கவிழ்ந்து
நடப்ப தெல்லாம்
வீணென்று நினைத்ததுவோ இக்காலப் பெண்குலமே?
விலகும் ஆடை
காணவுமோர் ஆள்தேடி நடப்பதிலே புரட்சியினைக்
காணல் என்னே?

கைப்பிடித்த கணவனும்தன் முகம்பார்த்தால் நாணுற்றுக்
கவிழும் பெண்மை
பொய்பிடித்த நாகரிகப் புன்மையிலே புரண்டதனால்
பொதுவிடத்தில்
மெய்யிடித்துச் செல்கின்ற காமுகனின் செயல்கண்டும்
மெச்சு மென்றால்,
ஐயகோ, தமிழ்ப்பண்பு கடலோடு காற்றோடு
கரைந்த துண்டோ?

அடிவரைக்கும் புரள்கின்ற சேலையினைக் களைந்துவிட்டே
'ஆங்கி லப்பெண்
உடை'போட்டுத் தொடைகாட்டி உள்மறைந்த மார்பகத்தை
உயர்த்திக் காட்டிக்,
கடைவீதிப் பொருளாக்கி வாணிகம்செயும் திரைப்படத்துக்
கணிகை போல
நடைபோட்டுத் திரிவதுவோ, நம்நாட்டு நங்கையர்கள்?
நாணம் எங்கே?

காதலென்ற பெயராலே 'திரைக்கூத்தி' புரிகின்ற
'காமக் கூத்தை'
வீதியிலே நாய்கூடப் புரிவதற்கு நாணிடுமே!
வெட்க மின்றி
மீதமொன்றும் வைக்காமல் உடல்முழுதும் காட்டுவதில்
மிகமுன் னேற்றம்!
ஏதுக்கோ ஏதுக்கோ இழிபிறப்புச் செய்கைகள்!
இறத்தல் நன்றாம்!

தன்கணவன் புகைப்படத்தின் முன்கூட உடைகளையாள்
தமிழப் பெண்ணாள்!
முன்னிலையில் ஆயிரம்பேர் பார்ப்பதற்கே உடைகளைந்து
மூழ்கி நீரில்
'என்னழகைப் பாருங்கள்!' எனக்காட்டும் திரைப்படத்தின்
இழிந்த காட்சி
'என்றொழியும்? என்றொழியும்?' என்றலறும் எம்முயிரோ
டெரியும் நெஞ்சம்!

மெய்மறந்தே உறங்குகின்ற நிலையினிலும் உடைசிறிது
விலகிச் சென்றால்
கைவந்து தானாகத் திருத்துகின்ற பெண்மையினைக்
காற்றில் விட்டே
மெய்தெரியக் கண்ணாடிச் சேலையினை உடுத்தபடி
வீதி யெல்லாம்
ஐயையோ! நடப்பதுவோ? இதைக்காணும் எம்கண்கள்
அவிந்தா லென்ன?

திங்களெனும் ஒளிமுகம்சேர் செவ்வாயில் வெள்ளிநகை
சிந்தி நிற்கும்
மங்கையின்று செயற்கையிலே மூழ்கிபல பூச்சுகளை
மழுங்கப் பூசி
வெங்காயச் சருகுபோல் உடையுடுத்தே அழகெல்லாம்
வெளியில் காட்டி
இங்குள்ள காளையர்க்கே அறைகூவல் விடுவதுவோ?
இழிந்த செய்கை!

—புலவர். தி. நா. அறிவு ஒளி.

படித்தவரின் பண்பில் கயமை.

சட்டத்தைக் கற்றவன் சட்டத்தை ஏமாற்றிக் குற்றஞ் செய்வதில் கைதேர்ந்தவனாயிருப்பதைப் போல, அறிவுத் துறையில் ஈடுபடும் கயவனும் அறிவியலில் கயமையைப் புகுத்துவதில் பேரீடுபாடுடையவனாக இருக்கின்றான்.

'வரலாறு' எழுதுவோர் உண்மையை எழுத முன்வர வேண்டுமே தவிர, தன் நோக்கம் கரவெண்ணம், தன்னல–இன நலப் பேதைமை ஆகியவற்றை வரலாற்றில் திணித்தெழுதுதல் அறிவுத்துறைப் பண்பாடன்று. நடுநிலையில் நின்று ஆராய்ச்சி செய்ய வியலாதார் ஆய்வாளராகவும், அறிஞராகவும், பேராசிரியராகவும் 'தகுதி' பெற்று வயிற்றுப் பிழைப்பு நடாத்தும் அவலத்தை நம் நாட்டைத்தவிர வேறெங்குங் காண வியலாது!

'தமிழர் பண்பாடும் வரலாறும்' என்ற பெயரிய ஒரு 'குழறுபடி குறிப்புகளை' (இதனை 'நூல்' என்று கூற என்னுள்ளம் ஒவ்வாததால் இச் சொல்லைப் பெய்தேன்) அறிஞர் என்று சிலராலே மட்டும் கூறப்படும் திரு. க. அ. நீலகண்ட(சாத்திரி)எழுதியுள்ளார் ஆங்கிலத்தில்.

அதனைத் தமிழிலும் மொழிபெயர்த்து இப்பொழுது வெளியிட்டிருக்கின்றனர். அதுவே இக்கட்டுரைக்கு நோக்கு நூலாகக் கொள்ளப்பட்டது. ஆங்கிலத்தில் இதனை எழுதியதால் தவறும் குற்றமும் கயமையும் வெளியுலகில் பரவப் பெருவாய்ப்பு அமைந்துவிட்டது. தமிழர் பண்பாடல்லாதவற்றையெல்லாம் தமிழர் பண்பாடாகக் காட்டப்,படாதபாடு பட்டிருக்கும் இப் படிப்பாளியின் குற்றத்தைத் தமிழறிஞர் பெருமக்கள் கண்டித்துத் திருத்த வேண்டும். உயர்ந்த தகுதி, இடம் ஆகியவற்றில் இருப்பதாலேயே ஒருவன் சொல்வது–எழுதுவது–அனைத்தும் மெய்யாகி விடா. அவன் செய்வதெல்லாம் நல்லதாகிவிடாது!

தம் பெயரில் கூட 'குலப் பிரிவை' இணைத்துக் கொண்டிருக்கும் "பரந்தநோக்கமுள்ள" இவர், எழுத்தில், பரந்தநோக்கம் என்னென்ன பாடுபட்டிருக்குமென்பதை விளக்க வேண்டுமா? இதே 'படிப்பாளி' எழுதிய 'சோழர்' என்ற ஆங்கில நூல் பெரிதும் தவறுகள் நிரம்பிய நூல் என்பதைத் தமிழறிஞர் பலர் எழுதிய மறுப்புக்கட்டுரைகள் நிலைநாட்டியுள்ளன. வரலாற்றுப் பேரறிஞர் சதாசிவ(பண்டார)த்தார் இயற்றிய 'சோழர் வரலாறு'(மூன்று பகுதிகள்) இவர் செய்த தவறுகளைச் சுட்டிக் காட்டித் தக்க சான்றுகளோடு மறுத்துள்ளமையை அறிஞர் அறிவர்.

'தமிழர் பண்பாடும் வரலாறும்' என்ற 'குறிப்பில்' வரலாறுமில்லை; பண்பாடுமில்லை! பண்புக்கேடுகளை விதந்தெழுதியும், ஆரிய வழிப்பட்டதே தமிழப் பண்பென்று உளறியும் ஏட்டைக் கெடுத்துள்ளார் பெரும் பேராசிரியர். தமிழர் பண்பாடு–நாகரிகம்–வரலாறு–கலையொழுக்கம்பற்றி நடுநின்று நூல் இயற்றிய பேரறிஞர் மறைமலையடிகளார், நாவலர், ச. சோமசுந்தர பாரதியார், அறிஞர், கா. சுப்பிரமணியனார், அறிஞர், மா. இராச மாணிக்கனார், மொழிப் பேரறிஞர். ஞா. தேவநேயப்பாவாணர், பேரறிஞர், சி. இலக்குவனார், பன்மொழிப் புலவர், கா. அப்பாத்துரையார், அறிஞர், க. வெள்ளைவாரணனார், வரலாற்றறிஞர்,சதாசிவ(பண்டார)த்தார் பண்டாரகர், வ.சுப. மாணிக்கம் ஆகியோரும், அறிஞர் பெருமக்கள் பிறரும் தம் நுண்மாண் நுழைபுல ஆய்வால் ஓர்ந்தாய்ந்துரைத்த ஒண்மை நுண்மைகளை ஒரு சிறிதும் கல்லாத–ஆராயாத–உணராத இப்'படிப்பாளி' தம்மனம் போன போக்கில், சான்றுகளற்ற–சான்றுண்மையற்ற–செய்திகளைத்–தமிழர் பண்பாட்டுக்கு மாறானவற்றையெல்லாம் பிதற்றியுள்ளமை நாணுதற்குரியதாகும்.

தொல்காப்பிய அறிவும், தமிழிலக்கிய அறிவும் தமிழ் மரபறிவும் கல்லாதார் தமிழக வரலாறு குறித்தும், தமிழர் பண்பாடு, நாகரிகம் குறித்தும் எழுதுவதற்கோ–பேசுவதற்கோ அணுவளவும் தகுதியும் உரிமையும் அற்றவராவார்! வடமொழி, வடவர் கொள்கை, ஆரிய மனப்பான்மை கொண்டோர் தமிழ், தமிழர், தமிழறம், தமிழ்ப் பண்பாடு, தமிழகம் பற்றி எழுதினால் அதில் உண்மையைத்தவிர மற்றெல்லாம் இருப்பதில் வியப்பென்ன இருக்க முடியும்?

க.அ.நீ. பார்ப்பன உணர்வம், ஆரியக் கோட்பாட்டினை முரசறையும் வெறியும் மிக்கவர் என்பதை நூல் முழுதும் கொட்டிக் காட்டியுள்ளார். ஆரியத்துக்கும், ஆரியர்க்கும், ஆரியக் கயமைகளுக்கும் ஆங்காங்கு முந்தி மடிகட்டிக்கொண்டு வழக்குரைஞர் போல் போராடிப் பரிந்துரைகள் கூறுகிறார். 'சாதி'வெறிமிக்கவராக 'வேத'–வைதீக' நெறிகளைப்போற்றி எழுதியுள்ளார். பிழையான வரலாறுகளைத் தெரிந்தெடுத்து எழுதுகிறார். தாம் எழுதுபவற்றை நிலைநாட்டத்தக்க சான்றுகளை–எடுத்துக் காட்டுகளை அடுக்கடுக்காகக் காட்டியிருந்தாலும் நாம் பாராட்டலாம்! எல்லாம் 'குத்து மதிப்பீடுபோலக் கூறுகிறார்.

1. அரசியல் வரலாறு. 2. அரசியல். 3. குமுகாயப்பொருள் நிலை. 4. சமயம். 5. இலக்கியம். 6. அருங்கலைகள், என்ற ஆறு தலைப்புகளாக 'இஃது' அமைக்கப் பெற்றுள்ளது.

1. நூலில் 'தமிழ்நாடு' என்று ஓரிடத்தும் எழுத மறுத்தவர் 'தென்பாரதம்' என்று வேண்டுமென்றே கூறியுள்ளார். தொல்காப்பியத்திலோ, கழக இலக்கியத்திலோ, பிற இலக்கியங்களிலோ தமிழ்நாடு 'தென்பாரதம்' என்று வழங்கப்பட்டுள்ளதா? 'தமிழ்நாடு' என்று குறிப்பதையே ஆசிரியர் க. அ. நீ. வெறுக்கிறாரா? இத்தகையவரா தமிழரைப் பற்றிய உண்மையை உரைப்பார்? தமிழர் இவரை நம்பத் தக்கவராகக் கருத இயலுமா?

2. குமரிக்கண்டம்(இலெமூரியாக் கண்டம்)பற்றி ஓரளவு குறிப்பிட்டு (பக். 12, 13)விட்டு, "இத்தகைய விஷயங்கள் வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் பண்பாடு சம்பந்தமாக அவ்வளவு முக்கியமானவை அல்ல. தற்காலத்தில் சில ஆராய்ச்சியாளர்கள், இந்தக் கதைகளை, தமிழகத்தின் தெற்குப் பகுதி கடலில் மூழ்கிய சம்பவத்துடனும், மொத்தம் பத்தாயிரம் ஆண்டுகள் இயங்கி வந்த மூன்று தமிழ்க் கழகங்கள் இணைத்து, வரலாறு எழுத முற்படுவது பொருத்த மற்றதாகும்." (ப. 12-13) என்கிறார்.

பிற ஆராய்ச்சியாளரை மறுக்க முடியாத க. அ. நீ. 'பொருத்த மற்றது' என்று குழப்புவது ஒன்றே, இவர் உண்மையை மறைக்க முயல்வதைக் காட்டுகிறது. தமிழரின் பழமை, முற்கால வரலாறு இலெமூரிய ஆய்வால் நிலைநாட்டப்பட்டால்; அஃது தமிழினத்துக்குப் பெருமையும் வலிமையும் நல்கிவிடும் என்று க. அ. நீ அஞ்சி அச் செய்திகளைப் பயனற்றவை, பொருந்தாதவை என வேண்டுமென்றே புறக்கணித்துவிட்டு, நல்ல ஆராய்ச்சியாளர்களையும் வல் வழக்காய்க் குறை கூறுகிறார்.

3. "தென்பாரதத்தில் பழைய கற்காலம் நிலவி வந்ததை ப்ரூஸ் புட் என்னும் ஆராய்ச்சியாளர் நிர்ணயித்து இருக்கிறார்" (ப: 14).

"தென்பாரதத்தில் நிலவிவந்த பழைய கற்கால மரபுகள்தாம், பாரதம், தென் ஆப்பிரிக்கா, மேற்கு ஐரோப்பா அடங்கிய ஒரு பெரும் பகுதியிலும் இருந்து வந்தன." (ப: 13) – இவ் விரு கூற்றுகளையும் உடன்பட்டெழுதிய க. அ. நீ, ஆங்காங்கு மாறுபட்டும் வேண்டு மென்றே வன்பொய்யுரைத்தும் செல்கிறார். "வரலாற்றுக் காலத்தமிழ் மக்கள், புதிய கற்கால மக்களின் சந்ததியார்களா, அல்லது அயல் நாட்டிலிருந்து தென் பாரதத்துக்கு வந்து சேர்ந்தவர்களா என்பது பற்றி நிர்ணயிப்பது எளிதல்ல. சிந்து நதிப்பள்ளத்தாக்கில் நிலவி வந்த செழிப்பான நாகரிகம், திராவிட நாகரிகம்தான் என்றும், புதை பொருள் ஆராய்ச்சி மூலம் அங்குக் கிடைத்த பல்வேறு சின்னங்களில் காணப்படும் எழுத்துகள் திராவிட மக்களின் பழங்கால லிபிதான் என் றும் சில ஆராய்ச்சியாளர்கள் வாதாடுகிறார்கள். மற்றும் சிலர், 'அந்த எழுத்துகள் இந்திய–ஆரிய வழியைச் சேர்ந்தவை; அங்கு நிலவி வந்த பண்பாடு வேதகால நாகரிகத்தைச் சார்ந்தது, என்றும் கூறுகிறார்கள். எப்படி இருந்த போதிலும் அங்குக் கிடைத்துள்ள முத்திரைகளில் காணப்படும் எழுத்துகளைப் படித்துப் புரிந்து கொள்ளும் வரையில் இதுபற்றி ஒன்றும் முடிவாகக் கூறுவதற்கு இல்லை. தக்காணத்திலும் தென் பாரதத்திலும் சமீபத்தில் தோண்டியெடுக்கப்பட்ட நடு கற் காலப் பகுதிகளில் கிடைத்த சான்றுகளிலிருந்தும், இடங்கள், மக்கள், பெயர்கள் பற்றிய ஆராய்ச்சி மூலமாகவும் ஒரு கருத்து வெளியிடப்படு கிறது. அதாவது தமிழ்மக்கள் மேற்கு ஆசியா, அல்லது கிழக்கு மத் திய தரைக்கடல் பகுதியிலிருந்து கடல் மூலம் நம் நாட்டிற்கு வந்து, தென்பாரதத்தில் குடியேறினார்கள் என்பதுதான்."

ஒரு பொய்யை நிலைநாட்ட க. அ. நீ. ஓராயிரம் பொய்களைக் கொட்டியளக்க வேண்டிய இரங்கத்தக்க நிலையில் சரிந்திருக்கிறார். மூளை, வெப்பத்தால் உருகி ஒட மேலும் எழுதும் பகுதிகள் இவை:–

"தாம்பிரபரணி நதிக்கரையில் அமைந்திருந்த ஆதிச்ச நல்லூர் பகுதியில் கிடைத்துள்ள சான்றுகள் மிகவும் முக்கியமானவைதாம். ஆயினும், அவைகள் இன்னும் சரியான ஆராய்ச்சிக்கு உட்படவில்லை. அங்கு நடத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியும், தற்கால விஞ்ஞான உதவியுடன் நடத்தப்படவில்லை. ஈமத் தாழிகளை உ ப யோ கி த் து அமைக்கப்பட்ட இடுகுழிகள் அங்குக் காணப்படுகின்றன. ஆனால் மற்ற இடங்களில் காணப்படுவது போன்று நடுகற்களோ, குத்துக்கற்களோ கல்வட்டங்களோ இல்லை. கறுப்பு சிவப்பு நிறத்தில் செய்யப்பட்ட கலயங்களும், இரும்புக் கருவிகளும் அங்குக் கிடைத்திருக்கின்றன. ஆயினும், ஆதிச்ச நல்லூரில் கிடைத்த மண்பாண்டங்கள் நடு கற் காலச் சின்னங்களைவிட மிகவும் பழமையானதாகவே இருக்கின்றன. வெண்கலப் பாத்திரங்கள், தங்கத்தாலான பட்டங்கள், இரும்புத் திரி சூலங்கள் முதலியவைகள் அங்குக் கிடைத்திருக்கின்றன இத்தகைய சின்னங்கள் கி. மு. 1200ல் பாலஸ்தீனம், சிரியா முதலிய இடங்களில் நிலவி வந்த பண்பாட்டிலும் காணப்படுகின்றன. ஆதிச்ச நல்லூர் மக்கள் நெல் பயிரிட்டு வந்தார்கள்.

நெற்பயிர் வேளாண்மையும், நடுகற்கால சின்னங்களும், தமிழ் பேசும் திராவிட மக்களுடன்தான் தென்பாரதம் வந்து சேர்ந்தன என்று ஆராய்ச்சி மூலம் நிர்ணயிப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகவே தோன்றுகிறது. இவ்வாறு வந்த தமிழ் மக்கள், ஏற்கனவே இந்தப் பகுதியில் வந்து வாழ்ந்து வந்த மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, பின்னர் வடக்குப் பகுதியிலிருந்து வந்த இந்திய–ஆரிய மக்களுடன் இணைந்துவிட்டார்கள் என்றே கொள்ளவேண்டும். (பக். 16)

'தமிழர் (திராவிடர்) தமிழ் நாட்டுக்குரியவரல்லர்; அவர்களும் வந்தேறிகளே' என்று நாட்டுவதற்கு க. அ. நீ. எவ்வளவு பாடுபட்டி ருக்கிறார் பாருங்கள்! முன்னுக்குப் பின் முரண்பாடாக எழுதும் ஆரி யக் குறும்பின் அழகை என்னென்போம்! 'ஆரியர் யார் என்று தெரி கிறது; இந்திய–ஆரியர் யார்? இந்தியர் என்போர் யார்? வடக்கே இருக்கும் இந்தியர் மட்டும் இதே நாட்டின் முற்காலக் குடிமக்களா?'

என்ற வினாக்களுக்கு க. அ. நீ. விடையளிக்கவே இல்லை. உண்மையைச் சொல்லப் பொய் புளுகும் க.அ.நீ. அறிவியல் நோக்கில் கேட்கப்படும் வினாக்களுக்கு எவ்வாறு விடையிறுக்க முடியும்?

தமிழர் இந்நாட்டுப் பழங்குடியினர் அல்லர் என்று நிலைநாட்ட வேண்டுமாயின், இந்நாட்டு உண்மைக் குடிமக்கள் இன்னர் என்று தெள்ளத் தெளிவாகக் கூற வேண்டும். அதற்கு வழி வகையில்லாமல் தமிழரைக் குடியேறியவர் என்று கூறுவது மடமையிற் பெரியமடமையேயாம்! க.அ நீ. தமிழ்மொழியின் தலையிலும் கைவைக்கத் துணிந்து கூறும் கூற்று:-

''ஆரியர்கள் பாரதத்துக்குள் பிரவேசித்தபோது, நாடு முழுவதிலும் திராவிட மொழிதான் பேசப்பட்டது என்று முன்னர் கருதப்பட்டது. ஆயினும், இன்றைய ஆராய்ச்சியின் பயனாக, திராவிடமொழி இன்றைய தமிழகப் பகுதியில் மட்டுமே வழங்கி வந்தது என்றுதான் பொதுவாகக் கருதப்படுகிறது. பலுச்சிஸ்தானில் ப்ராகி என்ற இடத்தில் திராவிடப் பண்பாடு நிலவி வந்ததற்கான சான்றுகள் உள்ளன. இதைப் பார்த்தால், அந்தச் சம்பவம், வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே மக்கள் கடல் மூலமாகவும், தரை மூலமாகவும் வந்து சேர்ந்ததன் விளைவாகவே இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

இதற்கு மாறான கருத்து ஒன்றைப் பேராசிரியர் பர்ரோ குறிப்பிட்டிருக்கிறார். அதாவது 'வேதங்களில் கூட திராவிட மொழிக் கலப்பு இருக்கிறது. இத்தகைய கலப்பு இன்றைய திராவிட மொழிகளைச் சேர்ந்ததல்ல. ஆகவே, வடபாரதத்தில் ஆரியர் காலத்திற்கு முன்பே ஒரு திராவிடப் பண்பாடு இருந்திருக்க வேண்டும். அஃது எப்படி ஏற்பட்டது என்பதை இப்பொழுது நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கில்லை' என்பதுதான் அவர் கருத்து. காக்கேசியா மலைத்தொடர்ப் பகுதியில் நிலவி வந்த மொழிகளின் இயல்புக்கும், திராவிட மொழிகளின் இயல்புக்கும் ஒற்றுமை இருந்ததை ஆதாரமாகக் கொண்டு, இந்தக் கருத்தை ஒருமொழி ஆராய்ச்சியாளர் ஆதரிக்கிறார். இதன் விளைவாக, ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே உள்ள பகுதியில் கி. மு. ஐயாயிரம் அல்லது ஆறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயே ஒரு பொதுவான மொழித் தொடர் இயங்கி வந்தது இதற்குக் காரணமாய் இருக்கலாம் என்று அவர் கூறுகிறார். இந்திய-ஐரோப்பிய மொழித் தொடர்பு ஏற்படுவதற்கு முன்னரே இவ்வாறு இருந்தது.

கடைசியாக, தமிழ்நாட்டு அறிஞர்கள் பலர், திராவிடமக்கள் வெளி நாட்டிலிருந்து வரவில்லை; இதே மண்ணில் தோன்றி வளர்ந்த மக்கள் தாம்—என்று கருதுகிறார்கள். இத்தகைய பிரச்னைகள் மிகவும் சிக்க லானவை. இவைகளைப் பற்றி உருப்படியானதும், முடிவானதுமான கருத்து வெளியிடுவதற்கு இல்லை என்பதை மட்டும் நாம் மனதில் கொள்ள வேண்டும்''. (பக்: 17–18)

'சிக்கலான கருத்து' என்று உண்மையை மழுப்ப முயன்றிருக்கி றார். க. அ. நீ. தமிழ் நாட்டறிஞர்கள் கருத்தைத் தனித்தனியாகக் காட்டி, அவற்றைத் தக்க காரணங்களோடு மறுத்திருந்தால் க. அ. நீ. யைப் பாராட்டலாம். இதை அவர் செய்யாததே, ஆராய்ச்சி நெறியி லிருந்து வழுவி வரப்பு மீறி ஓடியதை நன்கு காட்டுகிறது. தமிழ் மேதை, இலக்கண ஞாயிறு. ஞா. தேவநேயப்பாவாணர், திருத்தந்தை. ஈராசு பாதிரியார், சான். மார்சல் ஆகியோரின் ஆய்வுகளைத் தக்க காரணத்தோடு மறுக்க க. அ. நீ. முயலாமல், மொத்தமாக 'அது சரி யில்லை; இது சரியில்லை' என்பது கைம்பெண்டிர் முக்காட்டழுகை போன்றிருக்கிறது. ஆராய்ச்சியறிஞர். ந. சி. கந்தையா அவர்கள் பலநூல்களில் தமிழர், திராவிடர், தமிழ் மொழிபற்றி பல மேனாட்டு, உள்நாட்டு ஆய்வறிஞர் சான்றுகளோடு கூறியுள்ள கருத்துகளை க. அ. நீ. சற்றே படித்துப் புரிந்து கொண்டிருந்தால், அவருடைய குழப்பம் தெளிந்திருக்கக் கூடும்.

'உலகின் முதல் தாய் மொழி தமிழே' என்ற உண்மையை முது பெரும் புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் நிலை நாட்டியிருப்பதை அணுவளவும் ஓர்ந்துணராது மடமைசான்ற கருத்தை மேற் பகுதியில் எழுதித் தம் ஆய்வறிவின்மையை க. அ. நீ. நிலை நாட்டியிருக்கிறார். மேலும் அவர் திராவிடர்க்கென்று தனி நாகரிகமே இல்லையென உரைக்கவும் கூசவில்லை!!

''ஆரியர் நம் நாட்டுக்கு வருவதற்கு முன்பிருந்தே ஒரு செழிப் பான, வளம்பெற்ற நாகரிகம், திராவிட மக்கள் வாழ்ந்த பகுதியில் நிலவியிருந்தது என்று சொல்லுவதற்கு, தொல்பொருள் ஆராய்ச்சி மூலம் போதிய ஆதாரம் கிடைக்கவில்லை. ஆரிய மக்களுடன் தொடர்பு கொண்டு, திராவிட மக்கள் தென்பாரதத்தில் எளிய வாழ்க்கை நடத்தி வந்தார்கள்; அவர்களிடையே நாகரிக வாழ்க்கைக்கான பல அம்சங் கள் நிலவி இருந்தன—என்று கால்டுவெல் தம் மொழிகள் ஆராய்ச்சி

மூலம் முடிவு செய்திருக்கிறார்.'' (பக்: 18) திரு. கால்டுவெல் முடிவுகள் பல தவறானவை என்பதை ஆய்வாளர் நிலைநாட்டியவற்றுள் மேற் பழங் கருத்தும் ஒன்று. கால்டுவெல் தமக்குக் கிடைத்த சான்றுகள் சிலவற்றைக் கொண்டு சில முடிவுகளுக்கு வந்தார். அவர் உண்மை யான தனித் தமிழிலக்கண—இலக்கியங்களையும் முற்கால மொழியியலை யும் அறியாமல் தவறான முடிவுகளை எழுதியுள்ளார். க. அ. நீ. தமக்கு அரணான தவறான கருத்துகளில் மிகுந்த ஆர்வங்காட்டி உண்மையை மறைக்கப் பார்ப்பது எத்துணை கயமை!

தொல்பொருளாய்வு என்பது முடிந்த கதையன்று; தொடர்கதை! இன்று வரை திராவிட நாகரிகம் என்று செய்யப்பட்ட தொல்பொரு ளாய்வுகளை இவர் மறந்து விட்டு, அவற்றை ஆரிய நாகரிகம் என ஏற்றுக் கொண்டு, திராவிடர் நாகரிகத்தைக் காட்டும் ஆய்வு கிட்ட வில்லை என்பது எவ்வளவு அறிவுடைமை! இவ்வளவு மடமைத் திரு விளையாடல் புரிந்த பின்னர் தமிழக நல்லறிஞர்களையும் ஒரு 'சாடு' சாடியிருக்கிறார் க. அ நீ.

''ஆரியர்களுக்கு முன்பிருந்த தமிழ் மக்களின் வாழ்க்கை நாகரி கம் மிகுந்து இருந்ததற்குச் சான்றாகவும், கால்டுவெல்லின் கருத்தை மறுத்தும், புதிய கருத்துகளை தமிழ்மொழி ஆராய்ச்சியாளர் எவரும் இதுவரை வெளியிடக் காணோம். ஆகவே, பாரதத்தின் மற்றப் பகுதி களில் இருப்பதைப் போலவே, தமிழ் மக்களின் வரலாற்றிலும், ஆரியர் களின் வருகைதான் ஒரு முக்கிய கட்டமாக இருந்திருக்கிறது. அகஸ்தி யர், இராமர் சம்பந்தமான கதைகள் தென்னாட்டில் ஆரியப் பண்பாடு பரவியதையே எடுத்துக் காட்டுகிறது. இதிகாசம் சம்பந்தமான கதை கள், வரலாறு ஆகமாட்டா என்பது தெளிவு. அவைகளை வரலாற்றுச் சம்பவங்களாக விளக்க முற்படுவதும் பயன்தரக்கூடியது அல்ல. காடு களில் ஆரிய ரிஷிகள் ஆசிரமங்களில் வாழ்ந்து வந்ததாகச் சொல்லப் படும் கதைகள் மூலம் அவர்களுடைய பண்பாடு அமைதியான முறை யில் பரவியது என்பதை ஊகிக்கலாம். மற்றும், அத்தகைய பண் பாட்டை மக்கள் ஏற்றுக் கொள்ளும் முறையில் பரப்பி வந்தார்கள் என்பதும் தெரிகிறது. இருவகை மக்களிடையேயும் பெரும் அளவு தொடர்பு ஏற்பட்டு இருந்தது என்பதற்கும் சந்தேகம் இல்லை. சங்க நூல் தொகுப்பு இதற்குப் போதிய சான்று அளிக்கிறது. (பக்:18-19)

(54-ஆம் பக்கம் பார்க்க)

—அ. பொன்னம்பலம்.

புதிர்க் கதிர்கள் (X-RAY) இழைக்கும் கேடுகள்.

"அளவிற்த மிஞ்சினல் நல்லுணவும் நஞ்சாகும்" என்ற பழமொழி புதிர்க்கதிர்களைப் பொருத்த மட்டில் சாலப்பொருந்தும். மருத்துவத் துறையின் பலபிரிவுகளில் மட்டுமல்லாமல் இற்றை நாளில் பல்வகையான தொழில்துறைகளிலும் அருஞ்செயல் புரிந்துவரும் புதிர்க்கதிர்களைத் தவருக, அடிக்கடி மாந்தர்களின் உடலில் பாய்ச்சினல் பல்வகையான சிக்கலான கேடுகளை வழிவழியாக ஏற்படுத்தும் என்ற பேருண்மையைப் பெரும்பான்மையான மக்கள் அறியவிழைவதில்லை. "எதற்கு எடுத்தாலும் புதிர்க்கதிர் படம் பிடித்துப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் பெருகிவரும் இற்றைநாளில், மிகுதியான அளவில் புதிர்க்கதிர்கள் உடலில் பாய்வதால் ஏற்படும் கேடுகளை ஓரளவு நாம் அறிந்து கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

வரலாறு:- 1895-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இராண்ட்சன் புதிர்க்கதிர்களைக் கண்டுபிடித்த சில கிழமைகளுக்குள்ளாக, புதிர்க்கதிர்கள் சிறிது மிகுதியாக கண்ணில் பட்டால், கண் இமை அழற்சியை ஏற்படுத்தக்கூடும் என்ற உண்மை தெரியவந்தது. ஓராண்டு கழிந்த பின்னர் மிகுதியான அளவு புதிர்க்கதிர்கள் மாந்தனின் உடலில் பாய்ந்தால், தலையில் வழுக்கை விழுதல், தோலிலுள்ள திசுக்கள் மடிந்து போதல், பல்வகையான சிதைவு மாற்றங்கள் ஏற்படும் எனக் கண்டனர். 1902-ஆம் ஆண்டில் இராண்ட்சனின் ஆய்வுக் கூடத்தில் தொழில் இயல் வல்லுநராகப் பணியாற்றியவருக்குப், புதிர்க்கதிர்களின் காரணமாகப் புற்றுநோய் ஏற்பட்டது. இவருடைய உடலில் தொடர்ந்து 4 ஆண்டுகள் புதிர்க்கதிர்கள் பாய்ந்ததால் இவருக்கு இந்நோய் பற்றியது. ஆனல் தவருகப், புதிர்க்கதிர்களை மாந்தனின் உடலில் பாய்ச்சினல், உயிரையும் குடிக்கும் ஆற்றல் இந்தப் புதிர்க்கதிர்களுக்கு உண்டு என்ற பேருண்மை அறியவந்தது 1914-ஆம் ஆண்டில்தான். 1922-ஆம் ஆண்டில் உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள

புதிர்க்கதிர் படப்பிடிப்பு நிலையங்களில் பணியாற்றிய சுமார் 100 மருத்துவர்கள் புதிர்க்கதிர்கள் இழைத்த பல்வகையான சிக்கல்களினால் இறந்துபட்டனர்.

புதிர்க்கதிர்கள் இழைக்கும் கேடுகள்:- புதிர்க்கதிர்கள் மாந்தனின் உடலில் நிகழ்த்தும் கேடுகளை இவை உடலில் பாயும் காலம், அளவு இவ்வற்றை நிலைக்களமாகக்கொண்டு மருத்துவத்துறை ஆய்வு வல்லுநர்கள் கீழ்க்காணும் இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

(அ) எளிதாகப் பாய்வதால் ஏற்படும் கேடுகள்:- இதன் அளவை, சுமார் ஐந்து முறை என வைத்துக் கொள்ளலாம். புதிர்க்கதிர்கள் உடலில் பாயும் இடங்களிலுள்ள தோலானது மிகவும் செந்நிறமாகி விடுவதோடு அந்தப்பகுதியிலுள்ள மயிர்களும் உதிர்ந்து விடும். புதிர்க்கதிர்கள் தோலின் அடிப்பாகத்தில் பாய்ந்தால் சில நாட்களில் கொப்புளங்களைத் தோலில் ஏற்படுத்தும்; சில நாட்களில் இக்கொப்புளங்கள் சீழ்கோக்கத் தொடங்கும்; இக் கொப்புளங்கள் உடைந்தாலும் இவை ஏற்படுத்தும் காயங்கள் ஆறுவதற்குப் பல கிழமைகளாகும்.

(ஆ) மிகுந்த அளவில் நீண்ட நாட்கள் பாய்வதால் ஏற்படும் கேடுகள்:- இத்தகைய அறிகுறிகள் முதன் முதலாக, விரல்களைச் சுற்றி ஏற்படத் தொடங்கும். உகிர்களின் அடிப்பாகங்களில் செந்நிறமாகத் தோன்ற ஆரம்பிக்கும். உகிர்களில் குறுக்கும் நெடுக்குமாக வரைகள் ஏற்படத்தொடங்குவதோடு உகிர்கள் உறுதித் தன்மையை இழந்து கொஞ்சம் கொஞ்சமாக ஒடிந்துவிழத்தொடங்கும். உகிர்கள் தங்கள் இயற்கை வண்ணத்தை இழந்து பழுப்பு நிறத்தில் காட்சியளிக்கும். கைப்பகுதியிலுள்ள தோலானது செந்நிறமாகக் காட்சியளிப்பதோடு அல்லாமல், தோலில் சிதைவு மாற்றங்களும் நிகழும். இவை மட்டுமன்றித் தோலில் சிறுசிறு வடுக்களும் தோன்றும். இத்தன்மையான வடுக்கள் விரல்களின் மூட்டுகளில் தோன்றினால் தாங்க இயலாத வலியை ஏற்படுத்தும். நாட்கள் செல்லச் செல்ல, தோலானது மிகவும் தடிப்பாக ஆவதோடு தோலிலுள்ள மயிர்க்கால்கள் உதிர்ந்தும் விடும். இவ்வாறே தொடர்ந்து நீண்ட நாட்கள் உடலில் புதிர்க்கதிர்கள் (X-Rays) பாய்ந்தால், ஒருவகையான தோல்புற்று நோயை உண்டுபண்ணும் எனக் கண்டுள்ளனர். இத்தகைய புற்று நோயானது, பெரும்பாலும், மிகுந்த அளவில் புதிர்க் கதிர் மருத்துவ முறையை (X-Ray therapy) மேற்கொள்ளும் பிணியாளர்களுக்கும்

புதிர்க்கதிர் படப்பிடிப்புக் கருவிகளை உருவாக்கும் தொழிற்கூடங்களில் பணியாற்றுபவர்களுக்கும், புதிர்க்கதிர் படப்பிடிப்பு நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள், பொறிஇயல் வல்லுநர்கள், பணிப் பெண்கள் முதலியோருக்கும் ஏற்படுவது இயல்பு. பெரும்பாலும் புதிர்க் கதிர்கள் ஏற்படுத்தும் புற்று நோயானது பொதுவாக 35 முதல் 50 அகவை வரம்பிற்குள்ளாக ஏற்படுவது வழக்கம். இத்தகைய அகவை வரம்பானது, பொதுவாகப் புற்றுநோய் ஏற்படுத்தும் காலத்தைவிட மிகவும் இளமையான பருவம் என மருத்துவத்துறை ஆய்வு வல்லுநர்கள் கணக்கிட்டுள்ளனர். புதிர்க்கதிர்கள் தோற்றுவிக்கும் புற்று நோயானது, பெரும்பாலும், கை, விரல்கள் போன்ற உறுப்புகளையே பெரிதும் பற்றும்.

அண்மை ஆண்டுகளில் மிகுந்த அளவில் பயன்படுத்தும் மற்றொரு மருத்துவமுறையானது "புதிர்க்கதிர் ஆழ்-மருத்துவ முறையாகும்" (Deep X-Ray Therapy) இத் தன்மையான மருத்துவ முறையில் மிகுந்த ஆற்றல் வாய்ந்ததும், உடலின் திசுக்களில் மிகவும் ஆழ்ந்து பாயும் தன்மைபெற்ற புதிர்க்கதிர்களைப் பிணியாளனின் உடலில் செலுத்துகின்றனர். இத்தகைய மருத்துவ முறையினால் உடலிற்குப் பல்வகையான கேடுகள் சூழ்கின்றன. குமட்டல், குருதி கலந்த வாந்தி, வயிறு வீங்குதல், நெஞ்சாங்குலை செயலின்மை போன்ற அறிகுறிகளை இத்தகைய மருத்துவமுறை ஏற்படுத்தக்கூடும். இத்தகைய அறிகுறிகள் தொடர்ந்து ஏற்படின், நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குள் மாந்தன் இறந்துபடுவான். பல்வகையான ஆய்வுக்கூட விலங்குகளிடம் நிகழ்த்திய ஆய்வுகளிலிருந்து, மிகுதியான அளவில் புதிர்க்கதிர்கள் குடல் பகுதியில் பாய்வதால் குடலிலுள்ள மென்திசுக்கள் இறந்துபடுகின்றன எனக் கண்டுள்ளனர். அதிக அளவில் புதிர்க் கதிர்கள் விரைப்பையில் (TESTIS) பாய்ச்சப்பட்டால், நலப்படுத்த இயலாமலட்டுத் தன்மையை (STERILITY) ஏற்படுத்தக் கூடுமென ஆய்வின் மூலமாகக் கண்டுள்ளனர்; மேலும் குருதிச்சோகை (ANEMIA) போன்ற குறைபாடுகளுக்கும் ஆளாகக் கூடுமெனக் கண்டுள்ளனர்.

காப்புமுறைகள்:– புதிர்க்கதிர்கள் கண்டுபிடிக்கப்பட்ட தொடக்க காலத்திலே, ஈயமானது (LEAD) மற்றமாழைகளைவிட (METALS) புதிர்க்கதிர்களைத் தடுக்கும் திறன் பெற்றிருப்பதைக் கண்டறிந்தனர்; எனவே ஈயத்தினால் சமைக்கப்பட்ட ப்ல்வகையான தடுப்பு ஆடைகளை,

மாந்தனின் உடலில் தேவைக்கு மிகுதியான அளவில் புதிர்க்கதிர்களைப் பாயாமல் தடுக்கப் பயன்படுத்தினர். புதிர்க்கதிர் படப்பிடிப்பு நிலையங்களில் பணிபுரியும், மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில் இயல் வல்லுநர்களுக்குப் புதிர்க்கதிர்கள் இழைக்கும் கேடுகளினின்று தடுக்க அண்மையில் அனைத்துலக அடிப்படையில் ஓர் ஏற்பாடு செய்துள்ளனர். இத்தகைய ஏற்பாட்டின்படி, புதிர்க்கதிர் படப்பிடிப்பு நிலையங்களில் பணியாற்றும், மருத்துவர்கள், தொழில் இயல் வல்லுநர்கள். செவிலியர்கள் போன்றோர், தாங்கள் பணியாற்றும் நேரங்களில் தங்கள் மேலாடையில், புதிர்க்கதர்களை ஈர்க்கும் தன்மைவாய்ந்த சிறிய துண்டு புகைப்படத்தாளைப் பொருத்தி வைத்துக் கொள்ளவேண்டும்; இத்தகைய புகைப்படத்தாளைக் கிழமை ஒருமுறை வேதிப் பொருளில் கழுவி, எத்துணை அலகு புதிர்க்கதிர்கள் பாய்ந்துள்ளன எனக் கணக்கிட்டு அதற்கு இயைப இவர்களுக்கு ஓய்வு அளிக்கின்றனர். O

(50–ஆம் பக்கத் தொடர்ச்சி)

"தமிழர்க்கென்று தனிப் பண்பாடில்லை யென்பதற்குக் கழக இலக்கியங்களே சான்று" என்று சொல்லும் திறமை ஆரிய ஆய்வாளனைத் தவிர வேறு எந்த முட்டாளுக்காவது வருமா? இந்தியாவின் மற்ற பகுதி மக்களும் ஆரியர்களால்தான் பண்பாடு பெற்றுர்களாம்! ஆரியர்கள் இல்லாவிடின், தமிழர்க்குப் பண்பாடே தோன்றியிருக்காதாம்! இதைச் சொல்லும் நூலின்பெயர்தான் தமிழர் பண்பாடும் வரலாறும்!" இருபதாம் நூற்றுண்டிலேயே–அறிவியல் ஊழியான இக் காலத்திலேயே–ஆரியர் இவ்வளவு பச்சைப்பொய்யைப் புளுகும்போது, அந்தக் காலத்தில் என்னென்ன பொய்களைக் கூறியிருக்க மாட்டார்கள்?

திராவிடர்களோடு கலந்து பண்பாட்டை ஆரியர் அறிந்தனர் என்றும், மொழியையும் இலக்கணத்தையும் தமிழைப் பார்த்து வகுத்தனர் என்றும் நிலைநாட்டப் பெற்றிருக்கும் உண்மைகளை க. அ. நீ. மறுக்க முடியாமல், கடைக்காலுக்கே வெடிவைக்கிருர்:

தொல்காப்பியப் பொருளதிகார மரபுகள், ஐந்திணை வாழ்வொழுக்கங்கள் ஆகியவை கூட ஆரியப்பண்பாடுகள் என்றுதான் க. அ. நீ. கருதுகிருரா? தமிழர்க்கு மட்டும் பண்டைப் பண்பாடில்லை யென்ருரே; ஆரியர் யாரிடமிருந்து பண்பாட்டைக் கற்றுக் கெண்டனர் என்பதை விளக்கியிருந்தால் நன்ருக இருந்திருக்கும்! அதைச் சொல்ல க. அ. நீ, மூளை முன் வராதே !

(தொடரும்)

மக்களவை

அன்புள்ள ஆசிரியர்க்கு,

தனித்தமிழ் காக்கப்படவேண்டும் என்று, தாங்கள் தென்மொழி வாயிலாகத் தொண்டாற்றுவதாக நினைக்கிறீர்கள்: தனித்தமிழ் இயக்கத்தை வலுவடையச் செய்தால் மட்டும், தமிழ் மொழியும், பண்பாடும் காக்கப்படமாட்டா. தமிழன் நான்கு நூற்றாண்டுக் காலமாக அடிமைப்பட்டிருந்தான். அரசு எவ்வழி குடிகள் அவ்வழி என்ற முதுமொழிக்கேற்ப, அவனை அறியாமல் பிறர் நாட்டுப் பண்பாடுகளுக்கு அடிமைப்பட்டிருக்கிறான். இந்த நூற்றாண்டில் வாழும் தமிழர்கள் பண்பாடு, மொழி, பொருளியல், அரசியல் ஆகிய பல துறைகளிலும் ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். 1947-ஆம் ஆண்டில் நம்நாடுதான் விடுதலை பெற்றதேயொழிய, எல்லாத் துறையிலும் எல்லாரும் நினைத்ததைப் போன்று விடுதலை பெறவில்லை.

மொழித்துறையும் பண்பாட்டுத்துறையும் ஒன்றோடொன்று இணைந்த துறைகள். இந் நூற்றாண்டில் அறிவியலின் முன்னேற்றத்தால் ஏற்பட்ட விளைவால் பண்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூறுவர். இஃது உண்மை. ஆனால் இந்தப் பண்பாட்டு மாற்றம் தமிழன் தன் எண்ணத்தை இழந்து ஏற்றுக்கொண்ட மாற்றம். இந்த எண்ணத்தேக்கம், கண்மூடித்தனமான வெறியுணர்வோடு, அமெரிக்கப் பண்பாட்டைப் பின்பற்றுவதில்தான் ஏற்பட்டிருக்கிறது.

தமிழனின் இந்தக் கண்மூடித்தனத்திற்கு அடிப்படையானவை மூன்று: (1) செய்தித் தாள்கள்; கிழமை, திங்கள் இதழ்கள். (2) கல்வி (3) திரைப்படம்; கலை. இம் மூன்று துறைகளும் எந்த நாட்டிலும் மக்கள் உள்ளத்தையும் பண்பாட்டையும் மாற்றக் கூடிய ஆற்றல் வாய்ந்தவை. இந்த மூன்று துறைகளில் உள்ளோர் நினைத்தால் ஒரு நாட்டைக் கெடுக்கவும் முடியும், வாழ வைக்கவும் முடியும். இவை வல்லதிகார ஆட்சியில் கட்டுப்பாட்டுடன் இயங்குகின்றன. மக்களாட்சி என்ற அமைப்பும், வழங்கப்படும் உரிமைகளும், இவற்றைப் பொருளீட்டும் துறைகளாக மாற்றிச் சீர்கேடுகள் வளர்வதற்கு இடம் தந்து விட்டன. இதற்கு ஏற்பத் தமிழ் மக்களிடம இரண்டு குறைபாடுகள் உள. ஒன்று மொழியின் பெயரைச் சொல்லி எதைச் செய்தாலும் ஏற்றுக்கொள்வது. இரண்டு, மிகையான பாலுணர்ச்சி. எனவே இத்துறையில் ஈடுபட்டுள்ளோர் தமிழ் என்ற பெயரைக்கூறிக் குமுகாயத்திலுள்ளவர்களை ஏமாற்றிக் 'கவர்ச்சி''யைக் காட்டி ஈர்த்துக் கொள்கிறார்கள்.

கல்வித் துறை: இந்தத் துறை தலையாய துறை. ஒரு நாட்டின் எதிர்காலம், கல்வி பயிற்றுவிக்கும் முறையைப் பொறுத்துள்ளது. இத்துறை உடலுழைப்பு மேற்கொள்வோரைத் தாழ்த்திச் சோம்பேறிகளை உயர்த்துவதற்குரிய வாயிலாக அமைந்து விட்டது. வாழ்க்கைக்கும் கல்விக்கும் இப்போது தொடர்பே இல்லை உடல் உழைப்பை மதிக்காத கல்வி,–செயல் திறனற்ற ஏட்டுப்படிப்பு–இஃது ஒரு நாகரிகமாகி விட்டது. எனவே கல்விச் சாலைகள், படி எடுக்கும் எழுத்தர்களை உண்டாக்கும் தொழிற்கூடமாக மாறிவிட்டது என்று கூறினாலும் மிகையாகாது. ஆசிரியர்கள் வாழ்க்கையில் எல்லாத்துறைகளிலும் போட்டியிட்டு, அங்கு வாய்ப்புக்கிடைக்காமல் சலிப்பினோடு கல்வித் துறைக்கு வருகிறார்கள்; கிளிப்பிள்ளை போல ஆண்டுதோறும், சொன்னவற்றையே மீண்டும் மீண்டும் சொல்லிக்கொடுக்கிறார்கள். தாய்மொழியில் கல்வியைப்பயிற்ற வேண்டுமென்றே குரல் எல்லாத்துறையிலும் எழுப்பப்படினும், அதற்குரிய ஆக்கமுயற்சி எவ்விதத்திலும் மேற்கொள்ளப் படவில்லை. இந்தச் சூழ்நிலையில் மாணவர்களின் உயிர்போல்வன திரைப்படமும், பாலுணர்ச்சியைத் தூண்டும் செய்தித் தாள்களுந்தாம். அவர்களின் பொழுது போக்குதான் கல்வி.

திரைப்படக்கலை: கலை வாழ்க்கைக்கே என்ற நிலை ஏற்பட வேண்டும். இன்றைய கலை பொழுதுபோக்காக அமைவதோடு, நம் பண்

பாட்டையும் கெடுத்து விடுகிறது. இத்துறை எழுத்தாளர், நடிகர் போன்றவர்களின் வணிகத்துறையாகிவிட்டது. வங்கத்திலும் கேரளத்திலும் ஒரு பெரும்புரட்சி ஏற்பட்டுள்ளது. குமுகாய உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துக்காட்டும் இலக்கியமாகத் திரைப்படம் அமைந்துள்ளது. அஃது அந்தந்த நாட்டுப் பண்பாட்டை வெளிப்படுத்துகிறது. மக்களும் அதை ஏற்றுக் கொண்டனர். இந்த நிலை தமிழகத்திற்கு வந்தால்தான் மொழியும் பண்பாடும் காக்கப்படும்,

செய்தித்தாள், கிழமை திங்களிதழ்கள் : இதழ்களின் மேலட்டையில் வெளியிடும் படங்களையும் திரைப்படத்தில் நடிப்போர் அணியும் அணிமணிகளையும் பார்த்து அவற்றையே தமிழ் மக்களில் ஒரு சாரார் பின்பற்றுகிறார்கள். இவர்களின் முன்னோடிகள் கல்லூரி மாணவர்கள். திரைப்படத்துறையில் முன்னேறியுள்ள அமரிக்க நாட்டுப் பண்பாடு, உடை, அணியும்முறை இவற்றைப் படமுதலாளிகள் இறக்குமதி செய்ய, இந்த இதழ்கள் அவற்றை விளம்பரப்படுத்துகின்றன. எனவே கற்றவர் முதல் கல்லார்வரை மேற்கொள்ளும் இவ்விரண்டு துறைகளும் சீர்பெறவேண்டும்.

நீங்கள் தனித்தமிழியக்கம் நடத்துவதோடு இந்நாட்டுப் பண்பாட்டைக் காக்கச் செயல்திறம் நிறைந்த இளைஞர்களை உருவாக்க வேண்டும். பிறநாட்டுப் பண்பாட்டைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதால் ஏற்படும் தீமைகளை உணர்த்திக் குமுகாயத்தை எண்ண வைக்கவேண்டும். இதுவரை நீங்களே எண்ணினீர்களோ என்னவோ? எனவே பண்பாட்டைக் காக்க முயற்சி செய்யுங்கள். மொழி என்பது கருத்துகளை வெளியிடப் பயன்படும் ஒரு கருவி. அதற்குக் கொடுக்க வேண்டிய முதன்மையைக் கொடுத்துவிட்டு, அம்மொழியையே காப்பாற்றுவதற்கு அடிப்படையாக அமைந்துள்ள பண்பாடு, அரசியல், பொருளியல் ஆகிய இவற்றைப்பற்றி மக்கள் எண்ணிப் பார்க்கும்படி தூண்டிவிட வேண்டியதே நமது தலையாய கடமை என்று கருதுகிறேன்.

12. தொல்காப்பியர் மனை —பெரியாழ்வார்.
அண்ணாமலை நகர்.

(ஆசிரியர் குறிப்பு: கட்டுரையாளர் அருள்கனிந்து முதலிலிருந்து வெளிவந்த தென்மொழி இதழ்களைப் படித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம். அப்பொழுதுதான் அன்றிலிருந்து இன்றுவரை ‘தென்மொழி,மொழி, பண்பாடு, இனம், நாடு முதலியவைபற்றி எத்துணைத்

துணிவோடு தன் கருத்துகளை எடுத்துக் கூறிவந்துள்ளது என்பதை அவர் அறிய முடியும். இத்துறைகளில் இன்னும் விரிவாகச் செய்வது தான் தென்மொழியின் குறிக்கோள்; கடமை என்பதை அன்பர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். – ஆசிரியர்.)

குறைகள் அகலுமா ?

ஐயன்மீர்!

வணக்கம், வாழ்க! ஒரு நாட்டின் பெருமைக்கும் சிறப்புக்கும் காரணம் அந்நாட்டின் ஆசிரியர்களே என்று அடிக்கடி கூறிவரும் நமதமைச்சர் பெருமக்கள் அவ்வாசிரியர் குழுகாயத்தின் குறைகளைப் பற்றிச் சற்றேனும் எண்ணிப்பார்த்ததாகவோ, அக்குறைகளை அகற்ற முயன்றதாகவோ தெரியவில்லை. பல தலைமையாசிரியன்மார்கட்கும் இக்குறைகள் தெற்றெனப் புலப்பட்டும், எங்கே தம் வயிற்றுப் பிழைப்புக்குக் கேடு வந்துறுமோவென அஞ்சிக் கல்வித்துறை உயர்நிலை அலுவலர்கட்கு அறிவிக்காது வாளாவிருக்கின்றனர். என்னே அவர் தம் பேதைமை! கல்வித்துறையினரோ அமைச்சர் பெருமக்களோ இதனைக் கண்ணுற நேரின் நலம் விளையும் என்றெண்ணியே யாம் எழுதத் துணிந்தோம்.

இவ்வாண்டு சூன் திங்கள் முதல் ஒவ்வொரு பள்ளியும் நாளொன்றுக்கு எட்டுப் பிரிவுகள் (Eight periods) வேலை செய்தல்வேண்டும். ஆசிரியன் ஒவ்வொருவனும் கிழமையொன்றில் இருபத்தெட்டுப் பிரிவுகள் பணி புரிந்தாக வேண்டும். இப்புதிய முறைப்படி ஒவ்வொரு நாளும் காலை ஒன்பது மணிக்குப் பள்ளி சென்று மாலை ஐந்து மணிக்கு வீடு திரும்ப வேண்டிய நிலையில் இருக்கின்றோம். சில நாட்களில் (கிழமையில் நான்கு நாட்கள்) ஐந்து மணிக்குப் பின்னரும் இலக்கிய மன்றக் கூட்டங்களும் கட்டாய விளையாட்டுப் பயிற்சிகளும் நடைபெறுகின்றன. மாலை ஐந்து வரையும் வகுப்பறைகளுள் அடங்கியொடுங்கி அமர்ந்து சலித்த மாணவர்தம் இளவுள்ளங்கள், அதற்குப் பின் நடைபெறும் கூட்டங்களிலும் பயிற்சிகளிலும் எத்தகைய ஆர்வமொடு கலந்து கொள்ளுதல் இயலும்? எத்தகைய ஆர்வமொடு அவர் கலந்து கொள்கின்றனரென்னும் உண்மை அவரோடு நெருங்கிப் பழகும் எம்மனோராலன்றிப் பிறரால் அறியவியலாத ஒன்றாம். ஆசிரியன்மாரும் இங்ஙனமே ஐந்து மணி வரையும் பள்ளியி

னுள்ளடங்கி யிருந்துவிட்டுத் தம் இல்லஞ் செல்லுங்கால் தாம் திருத்த வேண்டிய சட்டுரை ஏடுகளும் தேர்வுச் சுவடிகளுமே அவரை வரவேற்கக் காணுகின்றனர். கல்வியதிகாரிகளின் புதிய ஆணையின்படி மொழிகள் பயிற்றுவிக்கும் ஆசிரியன்மார் ஆண்டொன்றுக்கு இருபது கட்டுரைப்பயிற்சிகள் கொடுத்துத் திருத்தவேண்டிய அவல நிலைக்காளாகியுள்ளனர். இங்ஙனம் நாடோறும் நீணெடு நேரம் பள்ளியில் பணியாற்றியும் வீட்டில் கட்டுரை ஏடுகளுடனும் தேர்வுச் சுவடிகளுடனும் ஓராசிரியன் போராடிக்கொண்டிருப்பானாயின் அவன் ஆன்றோர் தம் நூலைக் கற்று அறிவைப் பெற்று மாணவர்தம் அகவிருளகற்றி அறிவொளி பரப்புதல் யாங்ஙனம் இயலும்? மாணவர்தம் கல்வித் தாமுயரவும் அவர்கட்கிடையே ஒழுங்கும் உயர்வுள்ளமும் வளரவும் வேண்டுமாகலின் ஆசிரியன்மார் கல்வியறிவுடையராயிலங்குதல் இன்றியமையாது வேண்டப்படுவதொன்று. அங்ஙனம் அவர் நல்லறிவுடையராய் இலங்க வேண்டுமாயின் அவர்தமக்கு நூல் பயிலக் காலம் வேண்டும். யாம் ஈண்டெடுத்துக் கூறிய குறைகளை நீக்கித் தக்க முறைகள் செய்வாராயின் அனைவர்க்கும் நலம் விளையும் குறைகள் அகலுலுமா?

பெ. இளவரசு, க.இ., ஆ.ப. கீழச்சிவற்பட்டி.

ஆசிரியர் : மன்னர் மன்னன்.

பாவேந்தர் பாடிய 'குயில்'
பாவேந்தரைப் பாடுகின்றது.

அவரைப்பற்றி அவர் திருமகன்
எழுதும் 'நினைவு மண்டபம்'
படித்தீர்களா?

பாவேந்தர் எழுதிய எழுத்துகள்!
பாடிய பாடல்கள்!
ஒவ்வோர் இதழிலும்
ஒளி விடுகின்றன.

இன்றே உறுப்பினராகுங்கள்.
தனியிதழ் 75 காசு.
ஆண்டுக் கட்டணம் 10 உருபா.

'பாரதிதாசன் குயில்'
புதுவை-1.

ஆர்விடுத்தா லென்ன? இங் கார்போற்றி ளுலென்ன?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு!

நெருஞ்சிப் பாட்டு.

— சி. சத்தியமூர்த்தி, திருக்கோணமலை.

நெருஞ்சிப் பூவே! நெருஞ்சிப் பூவே!
பார்மகள் அணியும் பச்சைப் பட்டில்
பாங்குடன் அமையும் மஞ்சட் பூநீ!
பெரியதோர் தாமரை பெற்ற பேரழகு
சிறியவுன் உருவில் செறிந்து தோன்றும்!
அங்கை இதழ்விரல் ஐந்தால் நீயும்
மங்கை யர்பூச மஞ்சளேந் தினையோ?
பன்னுட் படர்ந்தபின் பழமாய்க் கிடந்து
நல்வழி நாடா தல்வழி நடப்போர்
செல்வழிக் குத்திநீ செவ்வழி காட்டுவாய்!
தாமடி வைத்த தவற்றை நினையார்
குத்தினை நீயென நினைக்குறை கூறுவர்;
உழவா ரத்தால் உலகினில் ஒருசிலர்

செழிக்கும் உன்னைச் செதுக்கி மகிழினும்
வழிவழி என்றும் வளர்ந்தோங் குகின்றாய்!
செழுமை அழகு சிறுமை மென்மை
முழுமையும் நிறைந்த நெருஞ்சிநின் அழகை
எழுமையும் எண்ணி இன்புறு வேனே!

(பூத்துக் குலுங்கும் நெருஞ்சியை ஏத்திப் புனைந்த பாடல்)

பணிமனைப் பாவை!

— மு. மகிழரசன்.

அணிகலன் பொன்னின் அவிரொளி மின்னி அழகொழுக
அணிமயில் சாயல் அழகியல் அன்னத் தனைநினைப்பின்
பணிமனை நோக்கிப் பறந்திடும் பாவாய்! பகர்வனகேள்!
சிணுங்கிடல் இன்றியென் சிற்றுரை நின்றுன் செவியுறவே.

வணங்கரும் பெற்றோர் வறுமை அகற்ற வளம்பெருக்கப்
பணிமனை சென்று பணம்பெற வென்று பயனுறப்போய்
அணிசெயக் கற்றாய்! அகஞ்செருக் குற்றாய்! அவலங்களைத்
துணையெனப் பெற்றாய்! திமிர்பெரி துற்றாய்! துடுக்குடனே!

நாணம் மறந்து நெளிந்திழி நக்கரும் நாடகம்போல்
கோணி உடலைக் குலுக்கிக் குதிரைவால் கொண்டையொடு
மாணவோர் செண்டு மலரையும் கொண்டுடல் மேல்புரளக்
காணுநர் காமுறு காட்சி புனைதரக் கற்றனையே!

கட்புலம் உண்ணக் களிக்குநர் நண்ணமேற் காற்றலைக்க
உட்புறம் மின்ன உடற்குவெங் காயச் சருகுடுத்திப்
பெட்புறக் காய உதட்டிற்குச் செஞ்சாயம் பூசிவிட்டுக்
கொட்புற மாவை முகத்தினில் அப்பியும் கொண்டனையே!

திரைப்படத் தாடும் தெரிவையர் போலத் திறம்படவே
அரைப்பட ஆடை அணியுறுப் பூடே அயல்படவே
வரையறை கெட்டு வருத்தமும் விட்டு வழியவர்க்குத்
தெரிவுற வென்றே தினவுற வென்றே திரிந்தனையே!

ஆடவர் தம்மை அடிமிதித் தாங்குறும் ஆணவத்தால்
கேடுறப் பேசிக் குலுங்க நகைத்துளக் கீழ்மையினால்

பீடுறு பெண்மை பெரிதெனப் புன்மைப் பெருமையினைத்
தேடுறும் தன்மை திறம்படக் கொண்டே திரிந்தனையே!

அச்சத்தை விட்டாய்; அடக்கத்தை விட்டாய், அறிவுகெட்டாய்;
உச்சத்திற் கேறும் செருக்குடன் ஓங்கி உருத்துருத்து
வெச்சென்று நோக்கி வெடுக்கென்று வாயாடி வெட்கம்விட்டு
மிச்சத்தை விட்(டு)அரும் மானத்தை விட்டு மிகைந்தனையே!

புதுமைகண் டாலதைப் போற்றிப் புனையப் பதைபதைத்தே
அதன்நன்றும் தீதும் அறிவறி யாதீதென் றுங்குரைப்பின்
மிதித்துக் கொளலும் கருதா, மனம்போல் மயக்குழன்றே
புதுவழி தன்னில் புலன்கெடும் தன்மை புனைந்தனையே!

பெண்மை துறந்தாய்; பெருமை உரிமை பெரிதறைந்தாய்!
தண்மை துறந்தாய்; தகைமை ஒழுக்கம் தமைமறந்தாய்!
பண்பைத் துறந்தாய்; பகட்டில் மிகைந்தாய்; பழிமறந்தாய்!
எண்மை துறந்தாய் வெறுமையில் உன்னை இழந்தனையே!

சினந்தபின் னேனும் சிறிதளவேனும் செவிகொண்டெண்ணித்
தினையள வேனும் திருந்திடு வாயோ! திருநுதலே!
எனையள வேனும் எடுத்துரைத் தேனும் எவன்பயனோ?(!)
உனையனை யாரும் உணர்ந்திடுவாரோ உலகினிலே!

(நன்மகளிர் பொறுத்தருள்க.)

எழுந்தே வாரீர்!

-தமிழ் மகன்.

எத்தனைதான் தாளிகைக ளெழுந்த போதும்
இங்கிருக்குந் தமிழருளந் திருந்திடாது.
பித்து வெறி தலைக்கேறி விட்ட மாந்தன்
பெருஞ்சுக்கு மருத்துவத்தால் மாறுவானோ?
எத்துறையி லாரியத்தின் ஆட்சி இல்லை?
எவ்வடிவி லக்கொடியோர் சூழ்ச்சியில்லை?
கொத்தவரும் நச்சரவின் பல்லில் நஞ்சாம்;
குடிகெடுக்கு மாரியத்தின் உடலே நஞ்சு!

‘தமிழன்நான்’ எனக்கூற நடுங்கும் நாவோ
தமிழ்வாழ்க வெனக்கூறும்? தமிழை மென்றிங்
குமிழ்கின்ருன் தனைத்தலைமை யேற்கச் சொல்லி
ஊர்வலத்தில் போவாரோ தமிழைக் காப்பார்?
கமழ்கின்ற ‘தமிழ்மாலை’ விற்பான் நோக்கிக்
கைகொட்டிச் சிரிக்கின்ருர்; கால மெல்லாம்
சுமையான ‘ஆரியமாம்’ ‘எட்டிப்பூவை’ச்
சுமந்தபடி திரிவதிலே களிக்கின்ருரே!

தமிழச்சி முலைப்பாலை உண்(டு) உயர்ந்த
தமிழ் நாட்டுக் காளையரே! பெண்குலத்தீர்!
அமிழ்தெனினும் பிறமொழியின் ஆக்கத் திற்காய்
அன்னையுடைக் குரல்வளையை அறுத்தல் வேண்டா!
உமிழ்ந்தெறிக நச்சுணர்வை! நந்தாய் நாட்டின்
உணர்வெழுந்து திளைத்திடவே; உழைப்பீர்; எங்குந்
தமிழ்தமிழ்என் ருர்வமுடன் குரலெழுப்பித்
தடைக்கற்கள் தமையிடிக்க எழுந்தே வாரீர்!

பழைய கதை.

-தென்கச்சி கோ. சுவாமிநாதன்.

கண்ணீர் என்னும் மையெடுத்துக்
கண்கள் பேசிய கதையெழுதி
விண்ணில் வான வீதியிலே
விரைவாய் காற்றில் அனுப்பிவைத்தேன்.

நேற்று நடந்தது போலிருக்கும்.
நினைவை மாற்ற முடியவில்லை,
தேற்றும் நீங்கள் இன்றில்லை.
தேற்று வார்யார்? அழுகின்றேன்!

உங்கள் வழியில் நான்வருவேன்.
உயிரை என்றோ விட்டிருப்பேன்,
பொங்கும் மழலையின் முகம் பார்த்தேன்.
போகும் பாதையை நான்மறந்தேன்.

முதல்நாள் இரவில் தனித்திருந்தோம்.
முழுமை நிலவில் சுவைத்திருந்தோம்.
எதில்நாம் குறையை விட்டுவைத்தோம்.
இனித்த சுவையை மறப்பேனே?

நினைவே போதும்; வாழ்ந்திருப்பேன்!
நெஞ்சே போதும்; நினைத்திருப்பேன்!
எனினும் உலகம கொடுமையிதே!
என்னிடம் தவறாய் நெருங்கிவரும்!

தனித்த கிளியே என்றிடுவார்.
தருவேன் பலவும் என்றழைப்பார்,
கனத்த நெஞ்சில் கனல்எழும்பக்
கதறி அழுவேன் அறிவீரோ?

குழைவும் கனிவும் விலகாவோ?
கூட்டம் யாவும் தொலையாவோ?
பழைய நினைவே துணையாகப்
பாவை வாழ்வேன்! முடியாதோ?

உலகம் ஒருநாள் திருந்தாதோ?
உடன்பிறந் தவளாய் நினைக்காதோ?
நிலவும் கொடுமை நீர் உணர
நினைத்தே இதனை அனுப்புகின்றேன்!

அந்நாள் எந்நாள்?

—பொன். தமிழ்முல்லை, சிங்கை.

அமிழ்தனைய நறுஞ்சுவையைப் பாட்டில் சேர்த்தே
அடித்தாளம் தவறாமல் இசைக்கும் வண்ணம்
தமிழீன்ற 'தென்மொழி'யின் தமிழைப் போற்றத்
தயங்குபவன் தமிழனெனில் ஒப்புக் கொள்ளேன்
அமிழ்தான தனித்தமிழின் பெருமை கொல்ல
அடியெடுத்த பார்ப்பனனும் புனைந்த நூலைத்
தமிழென்று ஒப்புகின்ற தமிழர் தம்மைத்
தமிழரென ஒப்பிடுவார் தமிழர் அல்லர்!

O தமிழ் வளர்க்கும் ஐயா, தென்மொழி கண்டு பூரிப்படைந்தேன். திருக்குறள் விரிவுரையைத் தொடர்ந்து வெளியிடவும். தாங்களோ, அரசியல் கவருட்ட நாற்றமெடுக்கும் செய்திகளை வெளியிடாமல், நடு நிலை நின்று தமிழை வளர்க்கவும், தமிழ் நலம் காணவும், தமிழ் விரிவுரையாற்றலும் செய்தலே நலம் பயக்கும் என்பது என் எண்ணம். தாங்கள் வளர, தமிழ் உயரும்; தமிழ் உயர நாடு சிறக்கும். தங்களின் வாழ்நாள் வளர இயற்கையை வணங்குகின்றேன்.

—குமு. இமயவரம்பன், கொட்டிக்காடு, மிதிலை(அஞ்) இராங்கியம், திருச்சி மா. வ.

O அன்புடையீர்! தென்மொழி படிப்போர் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. மதுரை போலும் பெரு நகரங்களில் கூட தென்மொழியைக் காண முடியவில்லை. நல்லவர்கள் தம் திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிக்காட்டக் கூசி முடங்கிக் கிடப்பதால்தான் போலியர்கள் இன்றைக்குத் தலைதூக்கித் தம்மைத் திறமை சாலிகளாகவும் ஆற்றல் உடையவர்களாகவும் காட்டிக்கொண்டு திரிகின்றனர். இந்தப் போலியரையே பெரியோராக எண்ணி மக்களும் ஏமாறி விடுகின்றனர். எனவே, நல்லவர்கள் அறைக்குள் அடைந்து கிடப்பது நாட்டுக்கே பெரிய இழப்பு; அவர்கள் நாட்டுக்குப் பயன்படார் எனின் அவர் இருந்தென்ன? இறந்தென்ன? அறிவாளியின் மூளை பயன்படாமல் இருப்பது கொலையாளியின் கத்தி பயன்படுவதைக் காட்டிலும் கொடியது. தென்மொழியை எங்கோ ஒரு மூலையில் இருந்தபடி தமிழாசிரியர் சிலர் மட்டும் கற்றால் பயன் வந்து விடுமா? தென்மொழி பொதுமக்கள் இதழாக மாறவேண்டும். குப்பை கூட்டுபவனும் கோடிப்பொருள் ஈட்டுபவனும் தென்மொழி படிப்பவராக இருக்க வேண்டும். இன்று தென்மொழியைப் படிக்கும் ஒவ்வொருவரும் குறைந்தது ஐவரையாவது தென்மொழி வாங்கிப் படிக்கத் தூண்ட வேண்டும். அங்ஙனம் செய்யவில்லையாயின் அவர் மொழிப்பற்றும் இனப்பற்றும் வெறும் போலியே! அருள் கூர்ந்து இந்த வேண்டுகோளைத் தென்மொழியில் வெளியிடுக. தென்மொழியை எங்கள் கல்லூரியில் பரப்ப நாங்கள் முயலுகின்றோம். எங்கள் முயற்சிக்குப்பின் ஏறத்தாழ 50 மாணவர் இப்பொழுது தென்மொழி படிக்கத் தொடங்கி விட்டனர். இதே முறையை ஏன் கல்லூரி மாணவர் பிறரும் பின்பற்றக் கூடாது?

—தமிழன்பன், தெப்பக்குளம், திருச்சி.

O இறைத்தமிழ் இன்புடன்—இன்பத்தமிழ் நாடாளத் தொண்டு பல புரிந்து பண்டைநிலை காணப்பாடுபடும் தங்கள் வாழ்வு வளமுடன் என்றும் செழித்தோங்க இயற்கை அன்னையை இன்னருள் புரிய இறைஞ்சுகின்றேன். தென்மொழி குறிப்பிட்ட நாளன்று வெளிவராமல் 10-12நாட்கள் பின்னடைந்தே வருதல் காணக் கண்கலங்குகின்றேன். அதற்குரிய சூழ்நிலை என்னவாக இருந்தாலும், எத்தன்மைத்தாயிருந்தாலும் என்னையறியாமல் ஒருதுளிக் கண்ணீர் என் விழியிலிருந்து விழுகிறது.

—தாமரை, 62, பாசியம் நகர், பெங்களூர்-21.

குறைந்த படிகளே கைவயம் உள்ளன.

o அரிய, இனிய தனித்தமிழ்க் களஞ்சியம்!

o அறிவியல் தொகுப்பு!

தென்மொழித் தொகுப்பு

சுவடி. 4

o அழகிய கட்டடம்.

ஒவ்வொன்றும் பதிவஞ்சல் செலவுடன்

விலை உருபா 12

o தேவைக்கு முன்னதாகவே எழுதுங்கள்.

தென்மொழி

கடலூர்-1.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.